सत्यमेव जयते

புதுச்சேரி அரசு

வரவு - செலவுத் திட்ட உரை

2023 - 2024

திரு ந. ரங்கசாமி

மாண்புமிகு முதலமைச்சர்

மார்ச் 13, 2023

வரவு – செலவுத் திட்ட உரை

2023 – 24

படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு. (குறள்-381)

படையும், செல்வமும், குடிமக்கள், அமைச்சும், நட்பும், அரணும் என்று சொல்லப்பட்ட ஆறு உறுப்புகளையும் உடையவன் அரசருள் ஆண் சிங்கம் போன்றவன்.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்களே !

நான் பெருமை வாய்ந்த இந்த அவையில் 2023-24ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்க உள்ளேன். 2023-24ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை, மானியக் கோரிக்கைகள் மற்றும் விளக்க விவரக் குறிப்பு ஆகியவை வழங்கப்பட உள்ளன.

2. பதினைந்தாவது சட்டமன்றத்தில் மூன்றாவது வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். மேலும், இந்த வாய்ப்பை எனக்கு வழங்கிய இவ்வாட்சிப்பரப்பின் மக்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன்.

3. எனது அரசு, இவ்வாட்சிப்பரப்பை அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி அடைந்த மாநிலமாக மாற்றுவதில் கவனம் செலுத்துவதுடன், இவ்வாட்சிப்பரப்பில் உள்ள அனைவருக்கும் சம உரிமை மற்றும் சமூக நீதியில் சம பங்கு அளிப்பதை இலக்காக கொண்டுள்ளது. மேலும், ஒருங்கிணைந்த வளர்ச்சியை அடைவதற்காக, அட்டவணையின மற்றும் பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர், மகளிர் மற்றும் குழந்தைகள், மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஆகியோர்களின் நலனில் சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது. இவ்வாட்சிப்பரப்பில் உள்ள அனைத்து மக்களின் நலனையும் கருத்தில் கொண்டு தற்போதுள்ள அனைத்து நலத்திட்டங்களை தொடர்ந்து மிகச்சிறப்பாக செயல்படுத்திட அனைத்து நடவடிக்கைகளையும் எனது அரசு எடுத்து வருகிறது என்பதை இப்பேரவையில் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

4. புதுச்சேரியில் ஜி 20 மாநாட்டை முதல் முறையாக நடத்தும் வாய்ப்பு நமது அரசுக்குக் கிடைத்தது பெருமைக்குரியதாகும். புதுச்சேரி, கலாச்சாரம் மற்றும் கட்டமைப்பில் தனித்துவம் கொண்டுள்ளது. மேலும், ஜி 20 மாநாடு இங்கு நடைபெற்றதன் மூலம் புதுச்சேரி உலகளாவிய கவனத்தைப் பெற்றுள்ளது. வங்காள தேசம், மொரிஷியஸ், நைஜீரியா, நெதர்லாந்து, ஓமன், சிங்கப்பூர், ஸ்பெயின் மற்றும் ஐக்கிய அரபு

நாடுகளின் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டு மாநாட்டில் கலந்து கொண்டனர். புதுச்சேரியில் சர்வதேச சுற்றுலாவை ஈர்க்கும் பொருட்டு, புதுச்சேரி ஆட்சிப்பரப்பின் தனித்துவமான கலாச்சார பன்முகத்தன்மையை விளக்கும் வகையில் பிரத்யேகமான நிகழ்வு சர்வதேச பார்வையாளர்களுக்காக நடத்தப்பட்டது.

5. மத்திய அரசால் வழங்கப்பட்ட சரக்குகள் மற்றும் சேவை வரிக்கான ஈட்டுத்தொகை கடந்த சூன் மாதம் 2022ஆம் ஆண்டுடன் முடிவடைந்து விட்டது. மேலும், பெட்ரோல் மற்றும் டீசல் மீதான மதிப்பு கூட்டுதல் வரி (VAT) மத்திய அரசால் குறைக்கப்பட்டது. அதன் காரணமாக எனது அரசு பொதுமக்களின் நலன் கருதி வரியை குறைத்தது. எனவே, இதனால் ஏற்பட்ட வருவாய் இழப்பினை ஈடு செய்யும் பொருட்டு, எனது அரசின் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு பாரதப் பிரதமர், மாண்புமிகு உள்துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் ஆகியோர் இவ்வரசுக்கு கூடுதலாக மத்திய அரசின் சிறப்பு நிதி உதவியாக ₹ 1,250 கோடி ஒதுக்கீடு செய்துள்ளனர். இதற்காக எனது அரசு, மாண்புமிகு பாரதப் பிரதமர், மாண்புமிகு உள்துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் ஆகியோர்களுக்கு மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

6. 2023-24ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ₹ 11,600 கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில், இவ்வாட்சிப்பரப்பின் சொந்த வருவாய் வரவினங்கள்

₹ 6,154.54 கோடியும், மாநில பேரிடர் நிவாரண நிதியையும் சேர்த்து மத்திய அரசின் நிதி உதவி ₹ 3,117.77 கோடியும், மத்திய அரசுத் திட்டங்களின்கீழ் (Centrally Sponsored Schemes) வழங்கும் நிதி ₹ 620 கோடியும் நிதிப் பற்றாக்குறையை ஈடுசெய்யும் பொருட்டு மத்திய அரசு அனுமதியுடன் வெளிச்சந்தை கடன் (Open Market Borrowing) மற்றும் பேரம் பேசி வாங்கும் கடன் (Negotiated Loan) மூலம் திரட்டப்படவுள்ள நிதி ₹ 1,707.69 கோடியாகும். இதில், மூலதன உள்கட்டமைப்பை மேம்படுத்தும் செலவினங்களுக்காக பேரம் பேசி வாங்கும் கடன் சென்ற ஆண்டை விட கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7. மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, எனது அரசு, சிறப்பு நிதி கூறுகளான இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் மகளிருக்கான சிறப்பு நிதியத்திற்கும் (Gender Budgeting), கால நிலை மாற்றத்தை எதிர்கொள்ள பசுமை சிறப்பு நிதியத்திற்கும் (Green Budgeting) மற்றும் இளையோருக்கான சிறப்பு நிதியத்திற்கும் (Youth Budgeting) இந்த வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது என்பதை பெருமை வாய்ந்த இந்த அவையில் தெரிவித்துக் கொள்கிறேன். சிறப்பு நிதியங்களுக்கு 2023-24ஆம் நிதியாண்டில் இந்த அனைத்து துறைகளையும் சேர்த்து ₹ 2,391 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வரும் நிதி ஆண்டுகளில் எனது அரசு இதில் அதிகக் கவனம் செலுத்தும் என்பதை இந்த மேன்மைமிகு அவையில் அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

(i) *மகளிருக்கான சிறப்பு நிதியம் :* மகளிருக்கான தனி நிதியமானது பாலின அடிப்படையில் அரசின் திட்டங்கள், கொள்கைகளை பகுப்பாய்வு, மதிப்பீடு மற்றும் ஒதுக்கீடு செய்யும் அணுகுமுறையாகும். மகளிருக்கு அதிகாரம் மற்றும் சமவாய்ப்பு அளித்து ஊக்கப்படுத்தவும், மகளிருக்கு முடிவெடுக்கும் உரிமை வழங்கவும் மற்றும் அவர்கள் பயன்பெறும்வகையில் மகளிருக்கான நிதி செலவினங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும். மகளிருக்கான தனி நிதியத்திற்கு ₹ 1,332 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ii) *இளையோர் சிறப்பு நிதியம் :* இளையோர் நமது கட்டமைப்பாளர்களாக இருப்பதால் இவ்வாட்சிப்பரப்பில் 15 முதல் 29 வயது வரை உள்ள இளையோர்களின் நலனுக்காகவும் மற்றும் வளர்ச்சிக்காகவும் எனது அரசு பல்வேறு துறைகளில் இளையோர் சார்ந்த திட்டங்களை செயல்படுத்த உள்ளது. இத்திட்டத்திற்காக ₹ 504 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(iii) *பசுமை சிறப்பு நிதியம் :* இந்தியாவிலேயே முதன்முறையாக எனது அரசு பசுமை தனி நிதியம் திட்டத்தை செயல்படுத்த உள்ளது. இதனை இந்த மேன்மைமிகு அவைக்கு தெரிவிப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். மேலும், நிலையான சமூக வளர்ச்சிக்கான நிதி திட்டமிடல் செயல்பாடுகளை அரசின் நிதி அறிக்கையில் ஒருங்கிணைக்கும் அணுகுமுறையாகும்.

அரசின் நிதி, நிலையான வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைப்பதற்குப் பயன்படுத்துவதை உறுதி செய்வதே பசுமை நிதி அறிக்கையின் முக்கிய நோக்கமாகும். சுற்றுச்சூழல் நிலைத்தன்மை மற்றும் காலநிலை மாற்றம் குறித்த உறுதிமொழிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான பசுமை சார்ந்தத் திட்டங்களை மதிப்பிடுவதற்காக எனது அரசு பசுமை நிதியறிக்கையை தயார் செய்யும் முயற்சியை ஆற்றல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் உதவியுடன் செயல்முறையை தொடங்கியுள்ளது. மேலும், பசுமை நிதியறிக்கை செயல்முறை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், ஒரு வழிகாட்டுதல் பட்டறை நடத்தப்பட்டது. இந்த நிதியாண்டில் பசுமை வரவு-செலவுத் திட்டதிற்காக அனைத்து துறைகளுக்கும் ஒட்டு மொத்தமாக ₹ 555 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

8. அரசின் நிதி ஒதுக்கீட்டில் பெரும்பகுதி சம்பளம், ஓய்வூதியம், கடன் மற்றும் வட்டியை செலுத்துதல் ஆகிய செலவினங்களுக்காகச் செலவிடப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். 2023-24ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடான ₹ 11,600 கோடியில் ₹ 2,542.81 கோடி சம்பளங்களுக்காவும் (21.92 விழுக்காடு), ₹ 1,455.32 கோடி ஓய்வூதியங்களுக்காகவும் (12.53 விழுக்காடு),

₹ 1,850.75 கோடி கடன் மற்றும் வட்டி செலுத்துவதற்காகவும் (15.95 விழுக்காடு), ₹ 1,690 கோடி மின்சாரம் வாங்குவதற்காகவும் (14.57 விழுக்காடு) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், அரசின் மற்ற முக்கியச் செலவினங்களான முதியோர் ஓய்வூதியம் மற்றும் பிற நலத் திட்டங்களுக்கு ₹ 1,856 கோடியும் (16 விழுக்காடு), அரசுக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் தன்னாட்சி உயர் கல்வி நிறுவனங்களுக்கு ₹ 350.06 கோடியும் (3 விழுக்காடு) மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்களுக்கு மானியக் கொடையாக ₹ 1,089.91 கோடியும் (9.39 விழுக்காடு) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த 2023-24ஆம் நிதியாண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ₹ 9,976.36 கோடி வருவாய்ச் செலவினங்களுக்காகவும் ₹ 1,623.64 கோடி மூலதன செலவினங்களுக்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

9. இந்த முன்னுரையுடன், 2023-24ஆம் நிதி ஆண்டிற்கான துறைவாரியான மானியக் கோரிக்கைகளை நான் சமர்ப்பிக்கிறேன்.

வேளாண் மற்றும் விவசாயிகள் நலம்

10. மாநிலத்தின் உணவு உற்பத்தி மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு, குறிப்பாக கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் வருமானத்திற்கு வேளாண்மை முக்கியப் பங்காற்றுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர்.

11. குறைந்த நீராதாரத்தைக் கொண்ட பயறுவகைகளை கூடுதல் பரப்பளவில் சாகுபடி செய்திடவும், உற்பத்தியை அதிகரித்திடவும், விவசாயிகளுக்கு கூடுதல் உற்பத்தி மானியம் வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போது பயறு வகைகளுக்கு உற்பத்தி மானியமாக ஏக்கருக்கு ₹ 3,000 வழங்கப்படுகிறது. இதனுடன் இடுபொருள் மானியமாக ₹ 2,000 சேர்த்து ₹ 5,000 வழங்கப்படும். மணிலாவிற்கு உற்பத்தி மானியமாக ஏக்கருக்கு ₹ 5,000 வழங்கப்படுகிறது. இதனுடன் இடுபொருள் மானியமாக ₹ 3,000 சேர்த்து ₹ 8,000 வழங்கப்படும். எள் சாகுபடிக்கு உற்பத்தி மானியமாக ஏக்கருக்கு ₹ 3,000 வழங்கப்படுகிறது. இதனுடன் இடுபொருள் மானியமாக ₹ 2,000 சேர்த்து ₹ 5,000 வழங்கப்படும். சிறுதானிய பயறு வகைகளுக்கு உற்பத்தி மானியமாக ஏக்கருக்கு ₹ 5,000 வழங்கப்படுகிறது. இதனுடன் இடுபொருள் மானியமாக ₹ 2,000 சேர்த்து ₹ 7,000 வழங்கப்படும்.

12. சர்வதேச சிறுதானியங்கள் ஆண்டு 2023-ல், சிறுதானியங்கள் அதிக அளவில் சாகுபடி செய்திட விவசாயிகளை ஊக்குவிக்கும் திட்டம் செயல்படுத்தப்படும். மேலும், கிராம மற்றும் நகர்புற மகளிர் பயன்பெறும் வகையில் சிறுதானியங்கள் மதிப்புகூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்துதல் பற்றிய பயிற்சிகள் அளிக்கப்படும்.

13. வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டத்தின்கீழ், தற்போது விவசாயிகளுக்கு டிராக்டர்கள், பவர் டிரில்லர்கள், அறுவடை இயந்திரங்கள் மற்றும் ட்ரோன்கள் வாங்க வழங்கப்படும் மானியம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

14. வேளாண் உற்பத்தியை பெருக்குவதற்கும். விவசாயிகளின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காகவும் மண் வளத்தைக் காத்திட அனைத்து விவசாயிகளுக்கும் அங்கக இடுபொருட்களான கம்போஸ்ட், மண் புழு எரு, உயிர் உரங்கள், ஜிப்சம், நுண் உரங்கள், தழைச்சத்து அளித்திடும் தக்கைப் பூண்டு மற்றும் சணப்பை விதைகள் முதலியன பொதுப்பிரிவு விவசாயிகளுக்கு 75 விழுக்காடு மானியத்திலும் மற்றும் அட்டவணையின விவசாயிகளுக்கு முற்றிலும் இலவசமாகவும் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

15. நெல், மணிலா மற்றும் உளுந்து விதை உற்பத்தி செய்திடும் விவசாயிகளுக்கு, நெல் சான்று விதை கிலோவிற்கு ₹ 10-ம், நெல் ஆதார நிலை விதை கிலோவிற்கு ₹ 14-ம், பயறு வகைகள் மற்றும் மணிலா சான்று விதைகளுக்கு ₹ 12-ம் மற்றும் மணிலாவிற்கான சான்று விதைகள் மற்றும் ஆதார நிலை விதைகளுக்கு ₹ 17-ம் ஊக்கத் தொகையாக உயர்த்தி வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், விவசாயிகளுக்கு

வழங்கப்படும் விதை மானியம் பொதுப்பிரிவினருக்கு 75 விழுக்காடு மானியத்திலும், அட்டவணை இனத்தவருக்கு 90 விழுக்காடு மானியத்திலும் வழங்கப்படும். விவசாயிகளுக்குத் தேவையான விதைகள் காலத்தோடு கிடைக்கும் பொருட்டு, விதை உற்பத்தி செய்திட விதை கிராமங்கள் மற்றும் விதை உற்பத்தி மையங்கள் அமைக்கப்படும்.

16. 1974ஆம் ஆண்டு இந்தியாவின் முதல் வேளாண் அறிவியல் நிலையம் புதுச்சேரியில் தொடங்கப்பட்டது. இதன் பொன்விழாவை முன்னிட்டு அந்நிலையத்தில் உள்ள பயிற்சிக் கூடங்கள், விவசாயிகள் தங்கும் விடுதி மற்றும் அனைத்து கட்டிடங்களையும் செப்பனிட ₹1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

17. "பிரதான் மந்திரி கிரிஷி சின்சாயி யோஜனா" மற்றும் நபார்டு வங்கியின் நுண்பாசன திட்டத்தின்கீழ், சிறு, குறு விவசாயிகளுக்கு 90 விழுக்காடு மானியத்திலும், பெரு விவசாயிகளுக்கு 75 விழுக்காடு மானியத்திலும் மற்றும் அட்டவணை இனத்தை சேர்ந்த விவசாயிகளுக்கு முற்றிலும் இலவசமாக நுண்பாசன கருவிகள் வழங்கிடும் திட்டம் செயல்படுத்தப்படும்.

18. புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் சுமார் 6,700 குழாய் கிணறுகளை விவசாயிகள் தங்களின் நீர்ப்பாசன தேவைகளுக்கு மின் சக்தியின் மூலம் இயக்கி நிலத்தடி நீரை தங்கள் நிலங்களுக்கு பயன்படுத்தி வருகின்றனர். இதற்கான மின் கட்டணத்தை இதுவரை அரசே ஏற்றுள்ளது. இதற்கு மாற்றாக, விவசாய குழாய் கிணறுகளை சூரிய சக்தி மூலம் இயக்குவதற்குண்டான சாத்தியக் கூறுகளை வேளாண் துறை புதுப்பிக்கவல்ல எரிசக்தி முகமை (REAP) நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்த ஆவணச் செய்யப்படும். இதற்காக ₹ 1 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

19. அதிக ஊட்டச்சத்துக்கள் அடங்கிய பாரம்பரிய நெல் ரகங்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கும், இரண்டு பருவங்களுக்கு மிகாமல் இயற்கை முறையில் நெல் ரகங்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தும் வண்ணம் ஏக்கர் ஒன்றிற்கு ₹ 8,000 உற்பத்தி மானியம் வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

20. “பரம்பரகாத் கிரிஷி விகாஸ் யோஜனா” திட்டத்தின்கீழ், இயற்கை விவசாயம் ஊக்குவிக்கப்படும். இதன் பொருட்டு 2023-24 முதல் 2024-25 வரை சுமார் 600 ஹெக்டர் பரப்பளவு விளை நிலங்களை இயற்கை வேளாண்மை சாகுபடியின் கீழ் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

21. விவசாயிகள் இயற்கை வேளாண்மை முறைகளை கடைபிடிக்க ஊக்கப்படுத்திடவும், பண்ணை மற்றும் கால்நடை கழிவுகளை மறுசுழற்சி செய்திடவும், விவசாயிகள் 1,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட உயிரி எரிவாயு கலன்கள் வாங்குவதற்கும் 50 விழுக்காடு மானியம் வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

22. அரியூர் மற்றும் கரிக்கலாம்பாக்கம் பகுதிகளில் வேளாண் விரிவாக்க மையம் மற்றும் 50 நபர்கள் அமரும் வகையில் விவசாயக் கருத்தரங்கு கூடம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஏற்றுமதி வணிகத்தை ஊக்குவிக்கும் பொருட்டு 5 முதல் 10 சென்ட் வரை பரப்பளவு நிலங்களில் மல்லிகை சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்கப்படுத்திட புதிய திட்டம் கொண்டுவரப்படும்.

23. வில்லியனூரில் செயல்பட்டு வரும் வேளாண் இணை இயக்குநர் அலுவலகத்தை மறு சீரமைப்பு செய்து வேளாண் பிரிவு, வேளாண் பொறியியல் மற்றும் தோட்டக்கலை பிரிவுகளை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வேளாண் வளாகம் அமைக்கப்படும். விவசாயிகளின் நலன் கருதி மழை நீர் சேகரிப்பு மற்றும் மறு சுழற்சி செய்து நிலத்தடி நீர் மேம்படுத்தப்படும்.

24. நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 159.36 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வனம் மற்றும் வனவிலங்கு

25. சதுப்பு நிலங்களில் உள்ள சீமைக் கருவேல மரங்களை அகற்றி, அவ்விடத்தில் இயற்கையாக வளரும் தாவர இனங்கள் கொண்ட காடுகள் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மத்திய அரசு திட்டத்தின்கீழ், ஊசுடு பகுதியில் கண்காணிப்புக் கோபுரம் கட்டப்படும். ஊசுடு வனவிலங்கு சரணாலயத்தில் சுற்றுச்சூழல் சுற்றுலா மேம்படுத்தப்படும். வனவிலங்கு மீட்பு, வனவிலங்குகளை வேட்டையாடுதலை தடை செய்தல், பாம்புபிடி பயிற்சி, கடல் ஆமை பாதுகாப்பு, மரம் நடுதல் ஆகியவற்றிற்கான பயிற்சிகள் அளிக்கப்படும்.

கால்நடைப் பராமரிப்பு மற்றும் கால்நடை நலம்

26. விவசாயிகள் தங்கள் வாழ்வாதாரத்திற்கு கால்நடை வளர்ப்பை பெரிதும் சார்ந்துள்ளனர் என்பதை அனைவரும் அறிந்ததே. கிராமப்புற பொருளாதார வளர்ச்சியில் கால்நடைப் பராமரிப்பு முக்கிய இடம் பெற்றுள்ளது.

27. 2023-24ஆம் நிதியாண்டில், பால் உற்பத்தியை பெருக்கி, பால் வளத்தில் தன்னிறைவினை அடைந்திடவும், முட்டை உற்பத்தியை அதிகரிக்கவும், அதன் மூலமாக விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர் போதிய வருவாய்

ஈட்ட வழிவகை செய்யப்படும். இதன் பொருட்டு, கால்நடை மற்றும் கோழிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கத் தேவையான திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

28. ஓர் உயர் ரக கலப்பின கறவைப் பசு 50 விழுக்காடு மானியத்தில் பயனாளிகளுக்கு வழங்கப்பட உள்ளது. மேலும், ஒரு கறவைப் பசு வைத்திருப்போருக்கு 50 விழுக்காடு மானியத்தில் இரண்டு கலப்பின கறவைப் பசுக்கள் வழங்கப்படும். மூன்று கறவைப் பசுக்களுக்கு மேல் வைத்துள்ள கால்நடை வளர்ப்போர், ஐந்து பசுக்களுடன் கூடிய ஒரு சிறு பால் பண்ணை அமைத்திட, தேவைப்படும் இரண்டு கறவைப் பசுக்கள் 40 விழுக்காடு மானியத்தில் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

29. கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திடவும், ஆட்டிறைச்சி உற்பத்தியினை அதிகரித்திடவும் 1,000 பயனாளிகளுக்கு நபர் ஒருவருக்கு ஐந்து பெட்டை ஆடுகள் மற்றும் ஒரு கிடா ஆடு ஆகியவை 50 விழுக்காடு மானியத்தில் வழங்கப்படும்.

30. நமது மாநிலத்தில் தரமான பால் உற்பத்தியினை அதிகரிக்கவும், பால் கறவையில் மனித ஆற்றல் பற்றாக்குறையை நீக்கிடவும், எனது அரசு பால் உற்பத்தியில் நவீனமயமாக்குதலை கொண்டுவரத் திட்டமிட்டுள்ளது.

இதற்கென நவீன பால் கறவை இயந்திரங்கள் கால்நடை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், விரைவாகவும், தரமானதாகவும், எளிய தொழில்நுட்பத்தில் பால் கறவை செய்ய இயலும். மேலும், கறவைப் பசுக்களுக்கு பொதுவாக உண்டாகும் மடிநோயின் தாக்கம் வெகுவாக குறையும்.

31. எனது அரசு கடந்த ஆண்டு வழங்கிய கலப்பின மாடுகள் மற்றும் கன்றுத் தீவனம், விவசாயிகளிடையே பெரும் வரவேற்பினைப் பெற்ற நிலையில், இந்த ஆண்டும் அனைத்து தொகுதிகளிலும் உள்ள விவசாயிகளுக்கு 75 விழுக்காடு மானியத்தில் வழங்கப்படும்.

32. கடந்த ஆண்டு வழங்கப்பட்டதைப் போல், இந்த நிதியாண்டிலும் புறக்கடை கோழி வளர்ப்புத்திட்டத்தின்கீழ், அரசு கோழிப் பண்ணையில் வளர்க்கப்பட்ட ஆறு வார வயதுடைய கிரி ராஜா இன கோழிகள் தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு 50 விழுக்காடு மானிய விலையில் வழங்கப்படும். தற்போது இறைச்சி சந்தையில் குறிப்பிடத்தக்க இடத்தினை வான் கோழி இறைச்சி பெற்றுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, வான் கோழி வளர்ப்பினை ஊக்குவிக்க, ஆறு வாரம் வயதுடைய வான் கோழிகள் தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு 50 விழுக்காடு மானியத்தில் வழங்கப்படும்.

33. நமது மாநிலத்தில், நகரமயமாக்கல் காரணமாக விவசாய நிலப்பரப்பு குறைந்து வருவதைக் கருத்தில் கொண்டு, நீர்த் தேவைகளைக் குறைத்து பயன்படுத்தவும் பசுந்தீவனத்தின் பயன்பாட்டினை அதிகரிக்கவும், நவீன “மண் இல்லாமல் பயிரிடும் முறை” அறிமுகப்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின்கீழ், ஏற்கனவே மாடு வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு பசுந்தீவன விதை, பயிரிடும் அடுக்கு போன்றவை அடங்கிய ₹ 35,000 மதிப்புள்ள Hydroponic Unit இலவசமாக வழங்கப்படும். இத்திட்டத்தின் மூலம் கறவைப் பசுக்களுக்கு தரமான பசுந்தீவனம் கிடைப்பதுடன், கொழுப்பு சத்துமிக்க தரமான பால் உற்பத்தி பெருகுவதால் கால்நடை விவசாயிகளின் வருமானமும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

34. கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்கள் மற்றும் அவற்றைக் கண்டறிந்து சிகிச்சை அளிக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். இது தொடர்பாக, கால்நடை நலம் மற்றும் நோய் கட்டுப்பாடு திட்டத்தின்கீழ் மூன்று நடமாடும் கால்நடை வாகனங்கள் வாங்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

35. கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்க நடமாடும் டிஜிட்டல் எக்ஸ்-ரே (Digital X-Ray) கருவி, மடி நோய்க்கான லேசர் சிகிச்சைக் கருவி, கால்நடை மருந்தகங்களுக்கு அல்ட்ரா சவுண்டு

கருவிகள் மற்றும் 17 திரைவழி கருவூட்டல் செய்யும் கருவிகள் ஆகியவை ₹ 1 கோடி மதிப்பீட்டில் வாங்கப்படவுள்ளது. மேலும், கால்நடைகளுக்குத் தேவையான மருந்துகள், தடுப்பூசிகள், குடற்புழு நீக்க மருந்துகள் ₹ 1 கோடி மதிப்பீட்டில் மத்திய அரசின் ASCAD (Assistance to States for Control of Animal Disease) திட்டத்தின்கீழ் வாங்கப்படும்.

36. மத்திய அரசின் "ராஷ்டிரிய கோகுல் மிஷன்" திட்டத்தின்கீழ், இனம் பிரிக்கப்பட்ட விந்தணு ஊசி, கறவைப் பசுக்களுக்கு செலுத்தப்பட்டு, பெண் கன்றுகளின் எண்ணிக்கையை அதிகரிக்கப்பட உள்ளது. கால்நடை விவசாயிகளின் வருவாயை உயர்த்தும் வண்ணம், இத்திட்டத்தில் மத்திய அரசின் மானியம் போக விவசாயிகள் செலுத்த வேண்டிய பங்குத் தொகையை அரசே செலுத்தும். மேலும், செயற்கை முறை கருத்தரித்தல் திட்டத்தின்கீழ், மத்திய அரசின் மானியம் போக பயனாளிகள் செலுத்த வேண்டிய பங்குத் தொகையான ₹ 16,000-த்தை (ஒரு நபருக்கு) அரசே செலுத்தும்.

37. தேசிய கால்நடை குழுமம் வாயிலாக 100 பெட்டை ஆடுகள் மற்றும் ஐந்து கிடா ஆடு கொண்ட பண்ணை வைக்க பயனாளி ஒருவருக்கு 50 விழுக்காடு மானியத்தினை மத்திய அரசு அளிக்கிறது. இதில் பயனாளி செலுத்த வேண்டிய

மானியத்தில் அட்டவணையின வகுப்பைச் சேர்ந்த பயனாளிகளுக்கு 90 விழுக்காடும் (அதாவது ₹ 9 இலட்சம்), பிற பிரிவுகளைச் சார்ந்த பயனாளிகளுக்கு 50 விழுக்காடும் (அதாவது ₹ 5 இலட்சம்) அரசே ஏற்க உத்தேசித்துள்ளது.

38. நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 77.56 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கலை மற்றும் பண்பாடு

39. அரியாங்குப்பத்தில் உள்ள பாரதியார் பல்கலைக் கூடத்தில் ₹ 9.36 கோடி செலவில் பொது பயன்பாட்டுக் கட்டடம் அமைக்கும் பணி தொடங்கப்படும். மகாகவி பாரதியார் நினைவு அருங்காட்சியகம்-ஆய்வு மையம், பாவேந்தர் பாரதிதாசன் நினைவு அருங்காட்சியகம்-ஆய்வு மையம், மகாகவி பாரதியார் மணிமண்டபம் – அரியாங்குப்பம், கீழூர் நினைவுச் சின்னம், தியாகி மக்கள் தலைவர் வ. சுப்பையா – திருமதி சரஸ்வதி சுப்பையா நினைவகம், சமூக அறிவியல் இலக்கிய ஆராய்ச்சி மையம் மற்றும் நூலகம் ஆகிய இடங்களில் புனரமைப்பு மற்றும் பராமரிப்புப் பணிகள் துவங்கப்பட உள்ளன.

40. உலகில் பல்வேறு நாடுகளில், தமிழ் வளர்ச்சிக்காக பாடுபட்டுக் கொண்டிருக்கும் தமிழ் அறிஞர்களை ஒருங்கிணைத்து தமிழ் ஆராய்ச்சியை ஒருமுகப்படுத்தவும், மேம்படுத்தவும் புதுச்சேரியில் உலகத் தமிழ் மாநாடு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. “தமிழ்ச் சிறகம்” மீண்டும் செயல்படுத்தப்படும். அரவிந்தரின் 150 ஆவது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு அவருடைய தத்துவங்கள், சிந்தனைகள், யோகா பற்றிய ஆய்வுகள், அவரின் இலக்கிய வெளியீடு போன்றவற்றை எடுத்துரைக்கும் வண்ணம் தேசிய கருத்தரங்கம் நடத்தப்படும். மகாகவி பாரதியாரின் நினைவு நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு அவர் தமிழ் மொழிக்குத் தொண்டாற்றியதை பெருமைப்படுத்தும் வகையில் நிகழ்ச்சிகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்தப்படும்.

41. M.Phil. மற்றும் Ph.D. ஆராய்ச்சி படிப்பு பயிலும் மாணவர்களுக்கு உதவும் வகையில், கலை அல்லது ஆராய்ச்சி தொடர்பான பாடங்களில் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சியைத் தொடர ஆராய்ச்சி அறிஞர்களுக்கு ஆய்வு உதவித் தொகை (Research Fellowship) வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள்

42. குடிமைப்பொருள் வழங்கல் துறையானது தற்போது கலால் துறையின் கட்டிடத்தின் முதல் தளத்தில் இயங்கி வருகிறது. இதனால், மாற்றுத்திறனாளிகள் மற்றும் மூத்த குடிமக்கள் இத்துறையின் சேவைகளைப் பெறுவதில் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். எனவே, அனைவரும் பயன்பெறும் வகையில் இத்துறைக்காக புதிய கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், இத்துறையின் சேவைகளை பொதுமக்கள் எளிதில் பெறுவதற்கு ஏதுவாக இத்துறையின் அனைத்து சேவைகளையும் இணைய வழியில் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

43. நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 246.82 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கூட்டுறவு

44. எனது அரசு, கூட்டுறவு துறையை வலுப்படுத்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்பதை இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். அனைத்து கூட்டுறவு சங்கத்தின்

செயல்பாடுகள் விரைவாகவும் மற்றும் திறன்மிக்கதாகவும் அமைய கணினி மயமாக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

45. அதிக பால் உற்பத்தி தரக்கூடிய 2,000 உயர்ரக பசுங்கன்றுகள் உருவாக்கும் பொருட்டு, ₹ 40.50 இலட்சம் மதிப்பீட்டில் 6,000 இனம் பிரிக்கப்பட்ட உறை விந்துக்கள் பெறப்பட்டு அவற்றை தொடக்க கூட்டுறவு பால் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. பாண்லே நிறுவனத்தின் மூலம் தொடக்க கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்க பயனாளிகளுக்கு ₹ 2.10 கோடி மதிப்பீட்டில் 1,000 பசுக்களுக்கு IVF கருவூட்டல் செய்யப்படும். இதில் மாநில அரசின் பங்கு ₹ 1.60 கோடி மற்றும் மத்திய அரசின் பங்கு ₹ 50 இலட்சம் ஆகும்.

46. இந்த நிதியாண்டில் "கூட்டுறவு சங்கங்களுக்கான வியாபார அபிவிருத்தி, புதிய தொழில்கள் மற்றும் மேம்பட்ட செயல்பாடுகள்" (Investment Assistance to Co-operatives for Business Expansion, New Business Activities and Better Performance) என்னும் திட்டத்தின்கீழ், பாண்லே நிறுவனத்திற்கு பால் விநியோகம் செய்யும் பால் உற்பத்தியாளர் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு 75 விழுக்காடு மானியத் தொகையில் கால்நடைத் தீவனம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வருவாய்

47. பத்து கிராமங்கள் வழியாக அமையவுள்ள விழுப்புரம் – புதுச்சேரி – கடலூர் – நாகப்பட்டினம் 45A நான்கு வழி தேசிய நெடுஞ்சாலை அமைப்பது தொடர்பாக கையகப் படுத்தப்பட்ட நிலங்கள், அவ்விடத்தில் உள்ள மரங்கள் மற்றும் கட்டடங்களுக்கு உரிய இழப்பீடு தொகையாக ₹ 35.10 கோடி வழங்கப்படவுள்ளது.

48. செல்லிப்பட்டு, துத்திப்பட்டு, திருவாண்டார்கோயில் கிராமங்கள் வழியாக அமைய உள்ள மாமல்லபுரம் – புதுச்சேரி 332A நான்கு வழி தேசிய நெடுஞ்சாலை அமைப்பதற்காக தேவையான நிலங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. அவற்றை இந்த நிதியாண்டிற்குள் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், கதிர்காமம் பகுதியில் இயங்கும் தில்லையாடி வள்ளியம்மை உயர்நிலைப் பள்ளிக்காக இந்த நிதியாண்டில் நிலம் கையகப்படுத்தப்படும்.

சிறைத்துறை

49. காரைக்கால், அக்கரைவட்டம் வருவாய் கிராமத்தில் மாவட்ட சிறை வளாகம் கட்டுவதற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளன. இவை, நவீன தொழில்நுட்ப வசதியுடன் ₹ 80 கோடி மதிப்பீட்டில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பள்ளிக்கல்வி

50. பள்ளிக் கல்வியே சமுதாயத்தின் முன்னேற்றம் மற்றும் மாணவர்களின் வளர்ச்சிக்கு பெரும் பங்கு வகிக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். பள்ளிக் கல்வியின் வளர்ச்சிக்காக தற்போது நடைமுறையில் உள்ள நலத்திட்டங்களான இலவச பாடப்புத்தகங்கள், குறிப்பேடுகள், சீருடைகள், சிற்றுண்டி, மதிய உணவு, கல்வி உதவித்தொகை முதலிய நலத்திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

51. மத்திய கல்வி அமைச்சகம் “ஸ்வச் வித்யாலயா புரஸ்கார்” விருதுகளை அறிவித்துள்ளது. இதில் புதுச்சேரி மாநிலம் 6 விருதுகளுடன் நாட்டில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. இவற்றில், அரசுப் பள்ளிகள் ஐந்து விருதுகளையும் தனியார் பள்ளி ஒரு விருதையும் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த சனவரி மாதம் கேரள மாநிலத்தில் நடைபெற்ற தென்னிந்திய அறிவியல் கண்காட்சியில், நமது மாநிலத்தைச் சேர்ந்த பள்ளி மாணவிகள் குழு பிரிவில் முதல் பரிசினை பெற்றனர். மேலும், ஆசிரியர் பிரிவில் நமது மாநிலத்தைச் சேர்ந்த ஆசிரியர் முதல் பரிசைப் பெற்றுள்ளார் என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

52. மத்திய அரசின் புதிய திட்டமான பி.எம். ஸ்ரீ (PMSHRI) என்ற திட்டம் இந்தியாவில் உள்ள பள்ளிகளின் தரத்தை உயர்த்த தொடங்கப்பட்டது. இத்திட்டத்தில் நமது புதுச்சேரி மாநிலத்தைச் சேர்ந்த 12 பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இவை மத்திய மாநில அரசுகளின் பங்களிப்புடன் 60 : 40 என்ற விகிதாச்சாரத்தில் ஒவ்வொறு பள்ளிக்கும் ஆண்டுக்கு தலா ₹ 2 கோடி வீதம் மொத்தம் ₹ 24 கோடி மதிப்பீட்டில் பள்ளிகளின் தரம் உயர்த்தப்படும்.

53. மத்திய அரசின் கல்வி அமைச்சகத்தின் பரிந்துரைப்படி அனைத்து அரசுப் பள்ளியின் ஆசிரியர்களின் கற்பித்தல் திறன், மாணவர்களின் கற்றல் திறன் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை கண்காணித்து செயல்படுத்துவதற்காக ₹ 2 கோடி திட்ட மதிப்பீட்டில் “வித்யா சமீஷா கேந்திரா” நிறுவப்படும். தற்போது மாணவ – மாணவிகளின் கல்வித்தரத்தை உயர்த்தும் பொருட்டு, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கு இலவச மடிக்கணினி விரைவில் வழங்கப்படும். மேலும், இத்திட்டம் எதிர்வரும் காலங்களில் தொடர்ந்து செயல்படுத்தப்படும். பள்ளி மாணவர்களின் ஊட்டச்சத்தினை மேம்படுத்தும் பொருட்டு மாலையில் சிறுதானிய சிற்றுண்டி வழங்கப்படும்.

54. இவ்வாட்சிப்பரப்பில் கல்வித் தரத்தை மேலும் உயர்த்தும் பொருட்டு அனைத்து அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை CBSE பாடத்திட்டம் கொண்டு வரப்படும். மேலும், புதுச்சேரி பகுதியில் உள்ள இலாஸ்பேட்டை, தவளக்குப்பம், பாகூர் மற்றும் ஏனாம் கனகலாபேட் பகுதியில் பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கங்களின் தரம் உயர்த்தப்படும். அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஏழாவது சம்பள ஊதியக்குழுவின் பரிந்துரை அமுல்படுத்தப்படும் என்பதை நான் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

55. நடப்பு நிதியாண்டில் பள்ளிக் கல்விக்காக ₹ 924.68 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உயர் மற்றும் தொழில்நுட்பக்கல்வி

56. உயர் மற்றும் தொழில்நுட்பக் கல்வியானது மாணவ சமுதாயத்தினர் தங்கள் திறமையை மேம்படுத்திக் கொள்ளவும் மற்றும் வளர்ந்துவரும் தொழில்நுட்பத்திற்கு ஏற்ப தங்கள் திறமையை வெளிப்படுத்தவும் பெரிதும் உதவியாக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். எனவே எனது அரசு உயர் மற்றும் தொழில்நுட்பக் கல்வியின் வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாக விளங்கும் என்பதை கூறிக்கொள்கிறேன்.

57. பெருந்தலைவர் காமராஜர் நிதியுதவித் திட்டத்தின்கீழ், மருத்துவம், பொறியியல் மற்றும் செவிலியர் மாணவர்களுக்கு இவ்வாண்டு நிதியுதவி வழங்க ₹ 29.70 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தின்கீழ் CENTAC மூலம் தேர்வு செய்யப்பட்டு கலை, அறிவியல், கால்நடை மருத்துவம், பல் மருத்துவம், வேளாண், சட்டம் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கப்படும். தற்போது கூட்டுறவுத் துறையின்கீழ் இயங்கிவரும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி இனிமேல் உயர் மற்றும் தொழில் நுட்பக் கல்லூரித் துறை செயல்பாட்டின்கீழ் கொண்டுவரப்படும்.

58. “ராஷ்ட்ரீய உச்சதர் சிக்ஷா அபியான்” (RUSA) என்ற உயர்கல்வி திட்டத்தின்கீழ் புதுச்சேரி பொறியியல் கல்லூரியை பல்கலைக்கழகமாக தரம் உயர்த்தும் பொருட்டு, புதுச்சேரி தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் ₹ 11.40 கோடி திட்ட மதிப்பீட்டில் கல்வி வளாகம் கட்டப்படும். புதுச்சேரி காஞ்சிமாமுனிவர் முதுகலைப் பட்ட மேற்படிப்பு மையத்தில் ₹ 2.50 கோடி மதிப்பீட்டில் ஆராய்ச்சி பணிகள் மேற்கொள்ளப்படும். காரைக்கால் பிராந்தியத்தில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தில் ₹ 7.00 கோடி திட்ட மதிப்பீட்டில் ஆய்வகங்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

59. நடப்பு நிதியாண்டில் உயர் மற்றும் தொழில்நுட்பக் கல்விக்காக ₹ 312.27 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மின்விசை

60. நடப்பு ஆண்டு முதல் இவ்வாட்சிப்பரப்பில் மின் ஆய்வுகளை மேலும், திறம்பட மேற்கொள்ள மின் ஆய்வு மற்றும் மின்சார உரிமம் வழங்கும் வாரியம் (Licensing Board) செயல்பாட்டிற்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்.

61. தற்போதுள்ள மின்விநியோக கட்டமைப்பை மேம்படுத்தும் பொருட்டு, ₹ 83.14 கோடி திட்ட மதிப்பீட்டில் (i) 18 சர்க்யூட் கிலோ மீட்டர் தொலைவிற்கு நீளமான மற்றும் அதிசுமை மின்னூட்டிகளை பிரித்தல்; (ii) 30 சர்க்யூட் கிலோ மீட்டர் தொலைவிற்கு மின்னூட்டிகளை பிரித்தல் மற்றும் விவசாய பயன்பாட்டிற்கான மின்னூட்டிகளை இரண்டாக பிரித்தல்; (iii) 183 சர்க்யூட் கிலோ மீட்டர் தொலைவிற்கு பழைய மற்றும் சிதைந்த உயர் மற்றும் தாழ் மின் அழுத்த கடத்திகளை மாற்றுதல்; (iv) 47 கிலோ மீட்டர் தொலைவிற்குக் குறைந்த மின் அழுத்த மேல்நிலை மின் இணைப்புகளை புதைவட மின் அமைப்புகளாக மாற்றுவது; (v) 102 கிலோ மீட்டர் தொலைவிற்கு வான்வழி தொகுப்பு கம்பிகளை மாற்றுதல் (Aerial bunched Cables); (vi) 134 மின்மாற்றிகளின் திறனை அதிகரிப்பது

(vii) 24 உயர் மின் அழுத்த விநியோக முறையை நிறுவுதல் மற்றும் 13 துணை மின் நிலையங்களில் மின் தேக்கிகளை நிறுவுதல் முதலிய பல்வேறு திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. மேற்படி திட்டப் பணிகளுக்கு ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டு 50 விழுக்காடு பணிகள் நடப்பு நிதியாண்டிற்குள் முடிவடையும்.

62. மேலும், ₹ 4.11 கோடி மதிப்பீட்டில் இவ்வாட்சிப்பரப்பில் உள்ள அனைத்து 132 KV திறனுக்கு மேல் இயங்கும் துணை மின் நிலையங்களில், ஒளியியல் சார்ந்த மின் வழித்தட அமைப்பின் மூலம் தொலைத்தொடர்பு மற்றும் தகவல்கள் பெறுவதற்கான பணிகள் நிறைவேற்றப்பட உள்ளன. இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டில், மத்திய அரசின் பங்கு ₹ 1.18 கோடி மற்றும் இவ்வரசின் பங்கு ₹ 2.93 கோடியாகும்.

63. புதுச்சேரி இலாஸ்பேட்டை மற்றும் தவளக்குப்பத்தில் இரண்டு 25 MVA மின் மாற்றிகள் கொண்ட புதிய 110/22 KV வாயு காப்பு துணை மின் நிலையம் அமைப்பதற்குத் தேவையான நிலம் கையகப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வில்லியனூர், காலாப்பட்டு, திருபுவனை, கோர்க்காடு மற்றும் தேத்தாம்பாக்கம் துணை மின் நிலையங்களில் உள்ள மின் மாற்றிகளின் திறனை மேம்படுத்துவதற்காக ₹ 44.13 கோடி

செலவிட திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணிகள் பவர் கிரிட் கார்ப்பரேஷன் நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டு எதிர்வரும் 2024ஆம் ஆண்டு சூன் மாத இறுதிக்குள் முடிவடையும். மேலும், வெங்கட்டா நகர் 110/22-11 KV துணை மின் நிலையத்திலிருந்து ஜிப்மர் வளாகத்தில் புதியதாக அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள வாயு காப்பு துணை மின் நிலையம் 110/22 KV புதை மின்வடங்கள் ₹ 21.64 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

64. மேலும், நடப்பு நிதியாண்டில் பல்வேறு திட்டப்பணிகளான வெவ்வேறு திறனுடைய 50 புதிய பகிர்ந்தளிக்கும் மின்மாற்றிகள் 15 கிலோமீட்டர் அளவிற்கு புதிய உயர் மின் அழுத்தப் பாதைகளும், 50 கிலோமீட்டர் அளவிற்கு புதிய குறைந்த மின் அழுத்தப் பாதைகளும் அமைக்கப்படும் மற்றும் 5 கிலோமீட்டர் அளவிற்கு உயர் மின் அழுத்தப் பாதைகளும், 15 கிலோமீட்டர் அளவிற்கு குறைந்த மின் அழுத்தப் பாதைகளும் மேம்படுத்தப்படும், 10 தொழிற்சாலைகளுக்கு உயர் மின் அழுத்த இணைப்புகளும், 50 தொழிற்சாலைகளுக்கு குறைந்த மின் அழுத்த இணைப்புகளும் வழங்கப்படும். 40 விவசாய பம்ப் செட்டுகளுக்கும், 12,000 வீடுகள், 1,700 வர்த்தக நிறுவனங்கள் மற்றும் 250 புதிய தெரு விளக்குகளுக்கும் மின் இணைப்புகள் வழங்கப்பட உள்ளன, 5 கிலோமீட்டர் தூரம் அளவிற்கு

உயர் மற்றும் குறைந்த மின் அழுத்த புதை மின்வடங்கள் புதியதாக அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், 50 குறைந்த மின் அழுத்த மேல் நிலை இணைப்புகள் புதை மின்வடங்களாக மாற்றவும், 10,000 பழுதான இயந்திர மின் அளவிகளை எலக்ட்ரானிக் மின் அளவிகளாக மாற்றுதல் ஆகிய மின் உள்கட்டமைப்பு மூலதன பணிகள் நிறைவேற்றப்படவுள்ளன.

65. மின் சிக்கனத்தை கடைபிடிக்கும் விதமாக இம்மாநிலத்தில் இதுவரை LED மின் விளக்குகளாக மாற்றப்படாமல் உள்ள அனைத்து தெரு மின் விளக்குகளையும், ₹ 4.50 கோடி செலவில், ஆற்றல் திறன் மிக்க LED மின் விளக்குகளாக நடப்பு நிதி ஆண்டில் மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

66. 2023-24ஆம் ஆண்டிற்கு இத்துறைக்கு ₹ 1,946 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தீயணைப்பு

67. பொது மக்கள் மற்றும் அவர்களது உடமைகளுக்கு தீயினால் விபத்து ஏற்படும்பொழுது அதனை கட்டுப்படுத்தும் பணியில் தீயணைப்புத் துறையின் சேவை மிகவும் மகத்தானது

என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். எனவே, எனது அரசு இத்துறையை நவீனமயமாக்க அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது.

68. புதுச்சேரி, வில்லியனூர், தவளக்குப்பம், லிங்காரெட்டிப்பாளையம் ஆகிய 4 இடங்களில் புதிய தீயணைப்பு நிலையங்கள் அமைக்க தேவையான நிலம் கையகப்படுத்தப்படும். மேலும், புதுச்சேரி பகுதியில் கரையாம்புத்தூர் மற்றும் காரைக்கால் பகுதியில் திருமலைராயன்பட்டினம் ஆகிய இடங்களில் புதியதாக தீயணைப்பு நிலையங்கள் கட்டப்படும்.

69. இத்துறையை மேலும், நவீனமயமாக்குவதற்காக 54 மீட்டர் உயரம் செல்லக்கூடிய அதிநவீன ஸ்கை லிஃப்ட், தீயணைப்பு ஊர்திகளின் பராமரிப்புக்காக மின்கலன் மின்னேற்றி, ஹைட்ராலிக் உயர்த்திகள், கான்கீரிட் வெட்டும் கருவிகள், தீயினுள் நுழைய தேவையான உடுப்புகள், விஷ பூச்சிகளிடமிருந்து பாதுகாக்கும் உடுப்புகள், தீ தடுப்பு உடுப்புகள், இரசாயன பாதிப்பிலிருந்து பாதுகாக்கும் உடைகள் தீ தடுப்பு சிரகத்திற்கு மடிக்கணினியுடன் கூடிய புரொஜக்டர் கருவி மற்றும் டிஜிட்டல் புகைப்பட கருவி வாங்கப்படும்.

70. நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 33.12 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மீன்வளம் மற்றும் மீனவர் நலம்

71. நாட்டின் சமூக-பொருளாதார முன்னேற்றத்திற்கு மீன்வளம் ஒரு முக்கிய அங்கமாக திகழ்கிறது. மேலும், அவை பல மீனவ சமுதாயத்தைச் சார்ந்த மக்களுக்கு நேரடியாகவும் மற்றும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பினை அளிப்பது மட்டுமில்லாமல் மக்களுக்குத் தேவையான ஊட்டச்சத்தினை உறுதி செய்கிறது. எனது அரசு மீனவ சமுதாயத்தினரின் நலனை மேம்படுத்துவதிலும், முன்னேற்றமடையச் செய்வதிலும் அக்கறை கொண்டுள்ளது.

72. வயது மூப்பின் காரணமாக மீனவ முதியோர்களின் சமூக உரிமையை மேலும், பாதுகாக்க 70 வயதிலிருந்து 79 வயதுவரை உள்ள மீனவர்களுக்கு தற்போது ₹ 3,000 உதவித் தொகையாக வழங்கப்படுகின்றது. இத்தொகை ₹ 3,500 ஆக உயர்த்தி வழங்கப்படும். இதன் மூலம் 2,000 மீனவ முதியவர்கள் பயன்பெறுவார்கள். இதற்காக இந்த நிதியாண்டில் கூடுதலாக ₹ 1.20 கோடி நிதி ஒதுக்கப்படும்.

73. புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் உள்ள மீனவர்களுக்கான சுனாமி குடியிருப்புகளுக்குத் தேவையான தார் சாலை, குடிநீர் மற்றும் கழிவுநீர் வடிகால் போன்ற உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை நபார்டு (NABARD) வங்கியின்

கடனுதவி மூலம் கடலோர மீனவக் கிராமங்கள் உள்ளடக்கிய தொகுதிக்கு, ஒரு மீனவக் கிராமம் என்ற அடிப்படையில் ₹ 1 கோடி மதிப்பீட்டில் 13 மீனவக் கிராமங்களில் அதாவது ₹ 13 கோடியில் அடிப்படை வசதிகள் செய்து தரப்படும்.

74. மேலும், பதிவுபெற்ற மீன்பிடி கலன்களுக்கு, உடனடி டீசல் மானியம் வழங்கும் திட்டத்தின்கீழ் லிட்டர் ஒன்றுக்கு VAT உட்பட ₹ 12 க்கு மிகாமல் வழங்கப்படும். மீனவர்கள் தங்களின் படகுகளில் வெளிப்புறம் பொருத்தப்பட்ட இயந்திரங்களை (12HP-OMB) மாற்றிக் கொள்வதற்காக பதிவு செய்யப்பட்ட இயந்திர மீன்பிடி கலன்களுக்கு 50 விழுக்காடு மானியமாக அதிகபட்சமாக ₹ 40,000 வரை 50 பயனாளிகளுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக ₹ 20 இலட்சம் ஒதுக்கப்பட உள்ளது.

75. பாரம்பரிய மீனவர்களின் மீன்பிடி தொழிலை ஊக்குவிக்கும் பொருட்டு 50 விழுக்காடு மானிய விலையில் தலா ₹ 5,000 மதிப்புள்ள மீன்பிடி வலை மற்றும் கயிறு வாங்க ₹ 1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது. இதன்மூலம், சுமார் 2,000 மீனவப் பயனாளிகள் பயன் பெறுவர். மேலும், 50 விழுக்காடு மானிய விலையில் 500 விசை படகு உரிமையாளர்களுக்கு தலா ₹ 50,000க்கு மிகாமல் (₹ 25,000 மதிப்புள்ள

மீன்பிடி வலை, ₹ 15,000 மதிப்புள்ள கயிறு மற்றும் ₹ 10,000 மதிப்பிலான கயிறு இழை) வழங்கப்படும். இதற்காக ₹ 2.50 கோடி நிதி ஒதுக்கப்பட்டு உள்ளது.

76. சென்டாக் மூலம் தேர்வு செய்யப்பட்டு, மேற்படிப்பு படிக்கும் மீனவச் சமுதாயத்தைச் சார்ந்த மாணவர்களுக்கு, புதுச்சேரி அட்டவணையின மற்றும் பழங்குடியினர் நலத்துறையால் வழங்கப்படும் கல்வி நிதியுதவிக்கு நிகராக வழங்கப்படும்.

77. "பிரதம மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனா" திட்டத்தின்கீழ், தொலைதொடர்பு சாதனமான டிரான்ஸ்பான்டர் கருவி பொருத்துவதற்காக விசைப்படகு உரிமையாளர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில், பயனாளிகள் செலுத்தும் பங்குத் தொகையை, இவ்வரசின் மீன்பிடி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் வழங்கப்படும். இதன் மூலம் 500 விசைப்படகு உரிமையாளர்கள் பயன்பெறுவர். இதற்காக கூடுதலாக ₹ 1 கோடி நிதி ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், உள்நாட்டு நீர்நிலைகளில் மீன் உற்பத்தியை அதிகரிக்க 200 ஹெக்டேர் பரப்பளவு உள்ள ஏரிகளில் விரல் அளவு மீன் குஞ்சுகளை இருப்பு செய்வதற்காக 2 இலட்சம் மீன் குஞ்சுகள்

வாங்குவதற்கு ₹ 6 இலட்சம் மதிப்பீட்டில் திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு மத்திய அரசிடம் நிதியுதவி பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

78. மீனவர்கள் மற்றும் மீன் வளர்ப்போர்களை பொருளாதாரரீதியாக மேம்படுத்தும் பொருட்டு, இரண்டு மீன் வளர்ப்போர் உற்பத்தியாளர் சங்கங்கள் நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும். ஆழ்கடல் மீன்பிடி கப்பல் வாங்குவதற்கு மத்திய அரசிடமிருந்து ₹ 1.68 கோடி நிதியுதவி கோரப்படும். இதன் மூலம் மூன்று மீனவப் பயனாளிகள் பயன்பெறுவர்.

79. மீனவர்களின் உயிர்ப் பாதுகாப்பினை உறுதி செய்யும் வண்ணம், 320 பாரம்பரிய மற்றும் இயந்திரப் படகு உரிமையாளர்கள் பயன்பெறும் வகையில், ₹ 1.38 இலட்சம் மதிப்பீட்டில், தகவல் தொடர்பு கருவிகளை மானிய விலையில் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 50 மீனவர்கள் தங்களின் பதிவு செய்யப்பட்ட பாரம்பரிய மற்றும் இயந்திர மீன்பிடி கலன், வலை மற்றும் இயந்திரம் வாங்க ₹ 1.10 கோடி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

80. மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு, மத்திய கடல்சார் மீன் ஆய்வு நிறுவனம் CMFRI மூலம் கடல்பாசி வளர்ப்பதற்குக் கண்டறியப்பட்டுள்ள

நான்கு இடங்களில் பூர்வாங்க ஆய்வுகள் மேற்கொள்ள ₹ 44 இலட்சம் மத்திய அரசிடம் இருந்து நிதி கோர நடவடிக்கை எடுக்கப்படும். கடல் மீன் வளங்களை அதிகரிக்கவும், மீன்பிடி தளங்களை மீட்டெடுத்து நிலையான மீன்வளம் மற்றும் பாரம்பரிய மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், செயற்கை பவளப் பாறைகளை 14 மீனவ கடலோரப் பகுதிகளில் தலா ₹ 31 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க ₹ 3.44 கோடி நிதியுதவி மத்திய அரசிடம் இருந்து பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

81. புதுச்சேரி கடற்கரைப் பகுதியில் ₹ 40 இலட்சம் மதிப்பீட்டில் சுனாமி நினைவிடம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் ஒருங்கிணைந்த நவீன முன்மாதிரி மீனவ கிராமம் அமைக்க மத்திய அரசிடம் இருந்து ₹ 100 கோடி நிதியுதவி கோரப்படும். மேலும், மின்னியல் மீன் காட்சியகம் மற்றும் கடலுக்கு அடியில் உயிரியல் பொழுது போக்கு பூங்கா ஒன்று அமைக்க மத்திய அரசிடம் இருந்து ₹ 42 கோடி கோரப்படும். மீன் பதப்படுத்தும் தொழிலை பாதுகாக்கும் பொருட்டு ₹ 5 கோடி திட்ட மதிப்பீட்டில் கொச்சின் கடல் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்துடன் இணைந்து ஊக்குவிப்பு மையம் ஒன்று அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

82. நடப்பு நிதியாண்டில் மீன்வளத் துறைக்காக ₹ 108.34 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சுகாதாரம் மற்றும் குடும்ப நலம்

83. இவ்வாட்சிப்பரப்பின் மக்கள் அனைவருக்கும் தரமான மற்றும் உயர்தர மருத்துவ சிகிச்சை பெற அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதே எனது அரசின் முக்கிய நோக்கமாகும். இதனை நிறைவேற்றும் பொருட்டு, இவ்வாட்சிப்பரப்பில் உள்ள அனைத்து பொது மருத்துவமனைகளின் உள்கட்டமைப்பு பணிகளை மேம்படுத்தி வருகிறது. இதன் காரணமாக, புதுச்சேரி அரசு பொது மருத்துவமனையில் MRI Scan இயந்திரம், மூலக்கூறு வைராலஜி ஆய்வகம், தானியங்கி ELISA செயலாக்க அமைப்பு நிறுவப்படும். மேலும், மத்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் தேசிய உறுப்பு மாற்று சிகிச்சை திட்டத்தின்கீழ், ₹ 1.80 கோடி செலவில் மாற்று அறுவை சிகிச்சை மையம் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. புதுச்சேரி அரசு பொது மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவு கட்டடம் கட்ட முடிவு எடுக்கப்பட்டுள்ளது. மேலும், காரைக்கால் அரசு பொது மருத்துவமனையில் நான்கு ஹீமோடையாலிசிஸ் இயந்திரம் ஃபிரிசினியஸ் வாங்குவதற்கு, தற்போதுள்ள உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், புதுப்பித்தல் மற்றும் பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். மாகி அரசு பொது மருத்துவமனைக்கு ஜெனரேட்டர் மற்றும் இன்குபேட்டர் வாங்கப்படும்.

84. ஏனாம் பொது மருத்துவமனையின் கட்டிடத்தை சீரமைப்பு மற்றும் பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். பழைய அலுவலக அறையில் RNTCP, AIDS கட்டுப்பாடு, யானைக்கால் நோய் தொற்று, மலேரியா நோய் தொற்று, IDSP நோயியல் ஆய்வகம் மற்றும் நுண்ணுயிரியல் போன்றவற்றிற்கு இடமளிக்கும் வகையில் அனைத்து உள்கட்டமைப்புகளுடன் கூடிய நவீன ஆய்வகமாக மேம்படுத்தப்படும்.

85. முதலியார்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தை புதுப்பிக்க ஆவன செய்யப்படும். சந்தை புதுக்குப்பத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படும். மண்ணாடிப்பட்டு சமுதாய நலவழி மையத்தில் 500 MA திறன் கொண்ட கதிர்வீச்சு (X-Ray) இயந்திரம், மூன்று தானியங்கி இரத்த அணுசோதனைக் கருவி மற்றும் ஷார்ட்வேவ் டயாதெர்மி (Short Wave Diathermy) ஆகியவை சுமார் ₹ 20 இலட்சம் மதிப்பீட்டில் வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

86. காரைக்கால், திருநள்ளாறு சமுதாய நலவழி மையத்தில் RCC கூரைகளை புதுப்பித்தல், தீயணைக்கும் கருவி மற்றும் ECG இயந்திரம் வாங்கப்படும். மாகி – பல்லூர், சமுதாய நலவழி மையத்தில் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு சிறப்புக் கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், மருத்துவமனையின் கருத்தரங்கு கூடம் சீரமைக்கப்படும்.

87. புதுச்சேரி அரசு மருந்தகத்தில், உயிர் காக்கும் மருந்துகளை பாதுகாக்கும் பொருட்டு, தடையில்லா மின்சாரம் வழங்குவதற்காக மூன்று ஜெனரேட்டர் வாங்கப்படும் மற்றும் ஆயுர்வேத மருந்து உற்பத்திப் பிரிவு கட்டப்படும். அபாயகரமான வைரஸ் நோய்களை கண்டறிவது தொடர்பாக மூலக்கூறு வைராலஜி ஆய்வகம் அமைக்கப்படும். தொற்று நோய்களை கட்டுப்படுத்துவதற்காக மூலக்கூறு கண்டறியும் ஆய்வகத்தின் தரம் உயர்த்தப்படும்.

88. இந்திரா காந்தி மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் ₹ 51 கோடி திட்ட மதிப்பீட்டில் உடற்கூறியல், முடக்கியல் மற்றும் இதர துறைகளுக்கான விரிவான ஆய்வகத்தை இந்திய சிறு தொழில் வளர்ச்சி வங்கியின் (SIDBI) கடன் உதவி மூலம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், மகாத்மா காந்தி முதுகலை பல் மருத்துவ அறிவியல் மையத்தின் இந்திய பல் மருத்துவக் குழுமத்தின் விதிமுறைகளை நிறைவேற்றுவதன் ஒரு பகுதியாக ₹ 27.21 கோடி திட்ட மதிப்பீட்டில் இந்திய சிறு தொழில் வளர்ச்சி வங்கியின் (SIDBI) கடன் உதவி மூலம் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

89. புதுச்சேரி அரியாங்குப்பம் பகுதியில், ESI பயனாளிகள் பயன்பெறும் வண்ணம் இரண்டு மருத்துவர்கள் உள்ளடங்கிய துணை மருத்துவ நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும், ESI பயனாளிகள் பயன்பெறுவதற்காக சில தனியார் மருத்துவமனைகளுக்கு அங்கீகாரம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

90. மேலும், சர்க்கரை நோய், இரத்தக் கொதிப்பு, புற்றுநோய் போன்ற தொற்றா நோய்களின் பாதிப்பு விழுக்காடு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. குறிப்பாக புற்றுநோயின் பாதிப்பு இறுதிகட்டத்தில் கண்டறியப்படுகிறது. இந்திய அளவில் மார்பக புற்றுநோய், கர்ப்பவாய் புற்றுநோய் மற்றும் வாய் புற்றுநோயின் பாதிப்பு எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. கர்ப்பவாயின் புற்றுநோயினை ஆரம்பத்திலேயே கண்டறிந்து தகுந்த சிகிச்சையளிக்க குறிப்பாக 30 வயதைத் தாண்டிய அனைத்து மகளிருக்கும் கட்டாய திரையிடல் (Screening) செய்ய ஆவன செய்யப்படும்.

91. நடப்பு நிதியாண்டில் சுகாதாரத் துறைக்காக ₹ 1,042.64 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தகவல் தொழில்நுட்பம்

92. வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள், நிர்வாகத்தில் சேவை வழங்கல் அணுகுமுறையை மாற்றியமைக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். புதுச்சேரியை டிஜிட்டல் மயமாக மாற்றவும், வாழ்க்கை முறையை

எளிமைப் படுத்தவும், தற்பொழுதுள்ள நிறுவன மற்றும் டிஜிட்டல் உள்கட்டமைப்புகளை மறுசீரமைக்க அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது.

93. புதுச்சேரி மின் ஆளுமைச் சங்கம் கடந்த 2006ஆம் ஆண்டு மின் ஆளுமைத் திட்டங்களை விரைவாகவும் குறிப்பிட்ட காலத்திற்குள் செயல்படுத்த உருவாக்கப்பட்டது. வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் காலத்திற்கு ஏற்றவாறு புதுச்சேரி மின் ஆளுமைச் சங்கத்தை மறு கட்டமைப்புச் செய்ய அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. மேலும், அனைத்துத் துறைகள் மற்றும் சங்கங்களுக்கான தகவல் தொழில்நுட்ப மனிதவள தேவைகள் புதுச்சேரி மின் ஆளுமைச் சங்கம் மூலம் மட்டுமே செயல்படுத்தப்பட உள்ளது. அனைத்து துறைகள் மற்றும் சங்கங்களுக்கான மென்பொருள் மற்றும் கைபேசி செயலி பயன்பாடுகள் புதுச்சேரி மின் ஆளுமை சங்கத்தால் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

94. இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தும் விதமாக இந்திய மென்பொருள் தொழில்நுட்ப பூங்காவின் (STPI) உதவியுடன் புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் “தொழில்நுட்ப பூங்கா” (IT Park) அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். டிஜிட்டல் இண்டர்ன்ஷிப் (Digital Internship) திட்டத்தின்கீழ் 50 பொறியியல் பட்டதாரிகள் தகுதி மற்றும் அனுபவம் வாய்ந்த பயிற்றுநர்களின் வழிகாட்டுதலின்படி தகவல் தொலைதொடர்பு

தொழில்நுட்பத்தின் பயன்பாடுகள் மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் நடைமுறைப் பணி அனுபவத்தைப் பெற ஊக்கத் தொகையுடன் கூடிய பயிற்சி வழங்க ₹ 1 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

95. வருமானச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ் வழங்கல் போன்ற சேவைகள் உட்பட 11 துறைகளின் 72 சேவைகள் மாவட்ட வலைதளம் மூலம் வழங்கப்படுகின்றன. எனவே, மின்-மாவட்ட வலைதளம் எளிமைபடுத்தப்பட்டு, வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுடன் மேம்படுத்தப்படும்.

96. வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் மற்றும் இணைய பாதுகாப்பை கருத்தில் கொண்டு, தகவல் தொழில்நுட்ப இயக்குனரகம், தரவு மையத்தின் மறுசீரமைப்பு மற்றும் மேகக் கணினி (Cloud Computing) சேவைகளை பயன்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து வருகிறது. வலைதள விண்ணப்பங்கள், தரவு மற்றும் சேவையக கணினி (Server) போன்றவற்றை நிறுவுதல், மேம்படுத்துதல் போன்றவற்றிற்காக புதுச்சேரி மாநில தரவு மையம் மறுசீரமைக்கப்படும். இதற்குத் தேவையான நிதி மத்திய அரசிடம் இருந்து கோரப்படும்.

97. அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் அதிவேக இணைய சேவையை வழங்குவதும், அதே நேரத்தில் இணைய பாதுகாப்பை உறுதி செய்வதும் அவசியமாக உள்ளது. எனவே, மென்பொருள் (Software) மற்றும் வன்பொருள் (Hardware) வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப மாற்றங்களைக் கருத்தில் கொண்டு பரந்த வலையமைப்பை மறுசீரமைப்பது குறித்த அறிக்கையை தகவல் தொழில்நுட்ப இயக்குனரகம் தயாரித்து வருகிறது. இதற்குத் தேவையான நிதி மத்திய அரசிடம் இருந்து கோரப்படும்.

98. நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 16.78 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்து சமய நிறுவனங்கள்

99. புதுச்சேரி அரசின் கட்டுப்பாட்டில் வரும் அனைத்து கோயில்களின் கடவுள் திருஉருவச்சிலைகள், தங்கம், வெள்ளி ஆபரணங்கள் மற்றும் இதர அசையும் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் மின்னணு (டிஜிட்டல்) முறையில் தயாரிக்கப்பட்டு அவை பொதுமக்கள் பார்வைக்காக இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்படும். மேலும், அசையா சொத்துக்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டு கோயிலுக்கு சொந்தமான நிலம், வீடு மற்றும் வணிக வளாகத்தினரிடமிருந்து

பெறப்படும் வாடகைத் தொகையை உயர்த்தி இதன்மூலம் திருக்கோயில்களின் வருவாயையும் உயர்த்த வழிவகை செய்யப்படும்.

100. இவ்வாண்டு புதுச்சேரி, வில்லியனூர் – திருக்காஞ்சி ஸ்ரீகாமாட்சி சமேத ஸ்ரீ கங்கைவராக நதீஸ்வரர் திருக்கோயிலில் சுமார் ₹ 1.66 கோடி செலவில் மஹா புஷ்கரணி விழா சிறப்பாகக் கொண்டாடும் பொருட்டு அனைத்துப் பணிகளும் நடைபெற்று வருகிறது. ஒதியம்பட்டு, ஸ்ரீ காசி விசுவநாதர் திருக்கோயிலின் படித்துறை மற்றும் சுற்றுப்புறச் சுவர் கட்டப்படும்.

தொழில்கள் மற்றும் வணிகம்

101. முதலீட்டாளர்களை கவரக்கூடிய ஊக்கத்தொகைகளுடன் திருத்தப்பட்ட தொழில் கொள்கை அறிவிக்கப்படும். மேலும், இந்த ஆண்டு முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தப்பட உள்ளது.

102. மேலும், சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தொடங்கும் முதலீட்டாளர்களுக்கு, அவர்கள் தொழில் சம்பந்தமாக ஒப்புதல்கள் மற்றும் ஆய்வுகளில் இருந்து முதல் மூன்று வருடங்களுக்கு விலக்கு அளிக்க வகை செய்யும் வண்ணம் புதுச்சேரி சிறு குறு மற்றும் நடுத்தர நிறுவனச் சட்டம் இயற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

103. மாவட்ட தொழில் மையம் மூலம் வழங்கப்படும் பலதரப்பட்ட தொழில் பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகை கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக உயர்த்தப்படாமல் உள்ளன. தற்போதுள்ள பொருளாதார பணவீக்கத்தைக் கருத்தில் கொண்டு பயிற்சி மேற்கொள்ளும் தொழில் பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகையினை மூன்று மடங்கு உயர்த்தி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இதன் மூலம் தொழில் பயிற்சி பெறுவோர் குறிப்பாக ஏழ்மை நிலையில் உள்ள மாணவர்கள் பயன்பெற ஏதுவாக இருக்கும். விஸ்வகர்மா ஐந்தொழிலாளர் நலவாரியத்திற்கு ₹ 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

தொழிலாளர் நலம்

104. தரமான தொழிற்பயிற்சி அளிப்பதற்காகவும் மற்றும் ஏனைய துறைகளின் மூலம் அளிக்கப்படும் தொழிற்பயிற்சிகளை ஒருங்கிணைத்து ஒரே துறையின் கீழ் கொண்டு வரும் பொருட்டு "திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர்" என்ற தனித் துறை ஒன்றை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

105. அனைத்து அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில், தொழிற்பயிற்சியின் தரத்தை மேம்படுத்தவும், கற்றல் மற்றும் திறன் மேம்பாட்டை அதிகரிக்கவும் நுண்திறன் வகுப்பு அறைகள் (SMART Classes) தொடங்கப்பட்டுள்ளது.

106. தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்களின் கல்வித் திறனை உயர்த்தி அவர்களுக்கு அரசு பொதுத் தேர்வுகளில் அளிக்கப்படும் சான்றுக்கு நிகராக இருக்க வழிவகை செய்து அதன் மூலம் அவர்கள் உயர்கல்வியில் சேர வழிவகை செய்யப்படும். இது சம்பந்தமாக தேசிய திறந்தவெளி பள்ளி நிறுவனத்துடன் (NIOS) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

107. மேலும், தொழிற்கல்வி மையங்களில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்தும் பொருட்டும் மற்றும் அவர்களுடைய பொருளாதாரத்தைக் கருத்தில் கொண்டும் தற்பொழுது அவர்களுக்கு அளித்து வரும் மாதாந்திர கல்வி உதவித் தொகை; மற்றும் மதிப்பெண் அடிப்படையில் வழங்கப்படும் உதவித் தொகை ஆகியவை ₹ 1,000-ஆக உயர்த்தி வழங்கப்படும். மேலும், தொழிலாளர் துறையின்கீழ் இயங்கும் 9 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு பள்ளிக் கல்வித்துறையில் செயல்படுவது போன்று காலைச் சிற்றுண்டி மற்றும் மதிய உணவுத் திட்டம் 2023-24ஆம் கல்வியாண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும். இதன் மூலம் 1,912 மாணவர்கள் பயன்பெறுவர்.

உள்ளாட்சி

108. உள்ளாட்சி அமைப்புகள் இவ்வாட்சிப்பரப்பின் தூய்மையை பராமரிப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். திடக்கழிவு மேலாண்மை

விதிகள் 2016-ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தை எனது அரசு முழு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

109. புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிக்கு உட்பட்ட கொம்யூன் பஞ்சாயத்துகள் மற்றும் காரைக்கால் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்த ₹ 36.58 கோடி மதிப்பீட்டில் பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் குப்பைகளை மறுபயன்பாடு மற்றும் மறுசுழற்சி செய்யும் பணிக்காக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. ஏனாம் பகுதியில் உயிரி-பிரித்தெடுத்தல் (Bio-Mining) முறையில் குப்பைகளை கையாளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

110. AMRUT 1.0 என்ற திட்டத்தின்கீழ், பல்வேறு அடிப்படை கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நைனார் மண்டபம், சுதானா நகர், தேங்காய்த்திட்டு மற்றும் காட்டாமணிக்குப்பம் பகுதிகளில் நீராதாரத்தை மேம்படுத்தும் பணிகளை மேற்கொள்வதற்கான பணி ஆணை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ், அனைத்து வீடுகளிலும் கழிப்பறைக் கட்டுதல், திடக்கழிவு மேலாண்மை மற்றும் நீர் மறுசுழற்சிக்கு ₹ 98.80 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

111. அனைத்து சட்டப்பேரவை உறுப்பினர்களும் தங்கள் தொகுதிகளில் பல்வேறு அடிப்படை கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு, தொகுதி வளர்ச்சி நிதியாக ஒவ்வொறு சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கும் ₹ 2.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பொலிவுரு நகரம்

112. மத்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்புற விவகாரங்கள் அமைச்சகம் அறிமுகப்படுத்திய பொலிவுரு நகர திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டப் பணிகள் புதுச்சேரி பொலிவுரு நகர வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் இவ்வாட்சிப்பரப்பில் செயல்படுத்தப்படும்.

113. பொலிவுரு நகரத் திட்டத்தின் கீழ், தற்போது ₹ 55.90 கோடி மதிப்பீட்டில் அண்ணா திடலில் சிறிய விளையாட்டு அரங்கம் கட்டுதல், சின்னையாபுரம் பகுதியில் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்காக 220 குடியிருப்புகளைக் கொண்ட அடுக்குமாடி கட்டிடம் கட்டுதல் மற்றும் நகரப்பகுதிகளில் பல்வேறு இடங்களில் மின் மாற்றிகளை மாற்றியமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றது.

114. பொதுப்பணித் துறை மூலம் ₹ 98.56 கோடி மதிப்பீட்டில் புதுச்சேரி எல்லப்பிள்ளைச்சாவடி, குண்டு சாலை சந்திப்பு முதல் சிவாஜி நகர் தேசிய நெடுஞ்சாலை (NH-45) அமைந்துள்ள மேட்டு வாய்க்காலில் சிமெண்ட் கால்வாய் அமைக்கும் பணிகள்; உழந்தை உபரிநீர் பாதைக்கான PCC வடிகால் கட்டுமான பணி – ரெயில்வே கல்வெட்டு P97 கீழ்பாதையிலிருந்து மரப்பாலம் சந்திப்பு ECR கல்வெட்டு வரை அமைத்தல்; முருங்கப்பாக்கத்தில் உள்ள உழந்தை ஏரியின் வடிகாலில் “U” வடிவ வாய்க்கால் அமைத்தல் மற்றும் ஏரியின் கரையை மேம்படுத்துதல்; உழந்தை உபரிநீர் கிழக்குப் பாதை அருகே புதிய புறவழிச் சாலையில் RCC Box கட்டுமானம் அமைத்தல்; மறைமலை அடிகள் சாலை சந்திப்பு மற்றும் வாணரப்பேட்டை நடைபாலம் வரை உள்ள உப்பார் வடிகால் மேம்படுத்துதல்; குமரகுருபள்ளத்தில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுதல் மற்றும் பள்ளிக்கட்டடங்களை மறுசீரமைத்தல் போன்ற பணிகள் நடைபெற்று வருகிறது.

115. மேலும், ₹ 786.65 கோடி மதிப்பீட்டிற்கான பணிகளுக்கு ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டும் பணி ஆணை வழங்கியும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

(i) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் ₹ 170.11 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு கட்டளை மையம் அமைக்கப்படும். இதற்கான பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

(ii) போக்குவரத்து துறை மூலம் ₹ 96 இலட்சம் மதிப்பீட்டில் 70 இ-ரிக்ஷா வாங்கப்படும். ₹ 26.25 கோடி மதிப்பீட்டில் மின் பேருந்து நிலையங்கள் அமைக்கப்பட்டு 25 மின் பேருந்துகள் இயக்கப்படும்.

(iii) தேசிய கட்டிட கட்டுமான கழகத்தின் மூலம் ₹ 313.80 கோடி திட்ட மதிப்பீட்டில் தாவரவியல் பூங்காவை மேம்படுத்துதல்; சுதேசி மில் வளாகத்தில் உள்ள வனப்பகுதியை இயற்கை சுற்றுலா தளமாக மேம்படுத்துதல்; பெரிய வாய்க்காலை புனரமைத்து 3 கிலோமீட்டர் நீளத்திற்கு நடைபாதை அமைத்தல்; கடலூர் சாலையில் ரெயில்வே மேம்பாலம் அமைத்தல்; மரப்பாலம் சந்திப்பை மேம்படுத்துதல்; கடற்கரைச் சாலையில் உள்ள புதுமைக் கட்டிடத்தை புதுப்பித்தல்; ஆட்டுப்பட்டி பகுதியில் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுதல்; குபேர் சந்தையை (பெரிய மார்க்கெட்) மேம்படுத்துதல்; நவீன வசதிகள் உள்ளடக்கிய பேருந்து நிலையம் அமைத்தல் மற்றும் தற்போதுள்ள பேருந்து நிலையத்தை மேம்படுத்துதல்.

(iv) பொதுப்பணித் துறை மூலம் ₹ 26.84 கோடி திட்ட மதிப்பீட்டில் பென்ஷனேட் பள்ளி கட்டிடத்தை மறுசீரமைத்தல்; குருசுக்குப்பம் மற்றும் லால்பகதூர் சாஸ்திரி வீதியில் தற்போதுள்ள நீர் உந்து நிலையங்களை மேம்படுத்துதல்;

நகர்ப்புற மற்றும் புறநகர் பகுதிகளில் அமைந்துள்ள ஆழ்துளை கிணறுகளில் Flow Meter அமைத்தல்; பழைய துறைமுகத்தில் நகர்புற பொழுதுபோக்கு கிராமம் அமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

(v) மேலும், பொதுப்பணித் துறை மூலம் புதுச்சேரி நகரப் பகுதியில் பாதாள கழிவு நீர் சாக்கடையை மறுசீரமைத்தல்; மறுசுழற்சி செய்த குடிநீரை பொது இடங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு அனுப்புதல்; இலாசுப்பேட்டை மற்றும் துப்புராயப்பேட்டையில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல்; நகர்புற மற்றும் சுற்றுப் புறங்களில் 24 மணி நேரமும் குடிநீர் வழங்குதல்; மாற்றுத் திறனாளிகளுக்கு நடைபாதை அமைத்தல்; 10.3 கிலோமீட்டர் தூரத்திற்கு மிதி வண்டி செல்ல பாதை அமைத்தல் ஆகிய பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது.

காவல்

116. புதுச்சேரி மக்களின் பாதுகாப்பு மற்றும் அமைதியான வாழ்க்கைக்கு வழிவகை செய்வதே எனது அரசின் முக்கிய கடமையாகும். இதனை மேலும், மேம்படுத்தும் வண்ணம் ₹ 15 இலட்சம் செலவில் புதியதாக ஆள்கடத்தல் தடுப்பு பிரிவு

ஒன்று அமைக்கப்படும். மேலும், ₹ 5.50 கோடி செலவில் ஒரு ஜாமர் வாகனம் உட்பட இரண்டு சக்கர வாகனங்கள் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

117. காவல் துறையின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, காவல் துறை இயக்குநர் அலுவலகம் மற்றும் முதுநிலை காவல் கண்காணிப்பாளர் அலுவலகங்களை புதுப்பித்தல் மற்றும் புனரமைப்பு செய்யப்படும். புதுச்சேரி கோரிமேடு பகுதியில் உள்ள ஆயுதக் கிடங்கை செம்மைப் படுத்துதல், நேரு வீதியில் பெரிய கடை காவல் நிலையம் இருந்த இடத்தில், அடித்தளத்தில் வாகன நிறுத்துமிடம் உட்பட மூன்று அடுக்குகள் கொண்ட காவல் நிலைய கட்டிடம் கட்டப்படும். இவ்வாட்சிப்பரப்பின் அனைத்து காவல் நிலையங்களின் கட்டிடங்களை தேவைக்கேற்ப பழுது பார்க்கப்படும். புதுச்சேரி சண்முகாபுரம் பகுதியில் உள்ள Type-I குடியிருப்பை இடித்துவிட்டு அங்கு Type-V மற்றும் Type-VI குடியிருப்புகள் கட்டப்படும்.

118. காரைக்கால் பகுதியில் முதுநிலை காவல் கண்காணிப்பாளருக்கான குடியிருப்பு மற்றும் காவல் கண்காணிப்பாளர் குடியிருப்புகள் கட்டப்படும். மேலும், மாகி பகுதியில் முக்கிய விருந்தினர்கள் தங்கும் விடுதி மற்றும் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான இணையவழிக் குற்றங்களை (Cyber Crimes) தடுக்க அதற்கான பாதுகாப்புக் கருவிகள் (Cyber Tools) கூடுதலாக வாங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

119. கடலோரப் பாதுகாப்பினை மேம்படுத்தும் பொருட்டு ₹ 20.51 இலட்சம் செலவில் கூடுதல் உயிர்ப்பாதுகாப்பு உடைகள் மற்றும் மிதவைகள் (Life Jackets and Life Buoys) வாங்கப்படும்.

120. நடப்பு நிதியாண்டில் இத்துறைக்காக ₹ 376.64 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

துறைமுகம்

121. புதுச்சேரி துறைமுகத்தில் வணிகரீதியான சரக்குகள் கையாளுவதற்குண்டான வசதிகள் மேம்படுத்தப்படும். மேலும், சிறிய கப்பல்களை பழுதுநீக்கும் பணிகள் மீண்டும் மேற்கொள்ளப்படும். மீன்பிடி துறைமுக கடற்தளத்திற்கு அருகில் மணல் தூர்வாரும் பணி மேற்கொள்ளப்படும். துறைமுகத்தில் கலங்கள் எந்நேரமும் சென்று வரும் வகையில் வழிகாட்டு கருவிகள் அமைக்கப்படும். மேலும் “சாகர்மாலா” (கடல் மாலை) திட்டத்தின்கீழ், துறைமுக கால்வாய்க்கும் உப்பார் கால்வாய்க்கும் இடையே தடுப்பு அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

பொதுப் பணிகள்

122. புதுச்சேரியின் வளர்ச்சிக்கு பொதுப்பணித் துறையின் பங்கு இன்றியமையாதது என்பது மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். இதன் தொடர்ச்சியாக, புதுச்சேரி பிள்ளைச்சாவடி, சின்னகாலாப்பேட், தட்டாஞ்சாவடி, தாகூர் நகர், ஜீவானந்தபுரம், கொட்டுப்பாளையம், சுப்பையா நகர், முத்தியால்பேட்டை, சஞ்சீவி நகர், ஆலங்குப்பம், அரியாங்குப்பம் மற்றும் வீராம்பட்டினம் பகுதிகளில் ₹ 122.26 கோடி திட்ட மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த குடிநீர் திட்டத்தின்கீழ், குடிநீர் குழாய் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

123. மேலும், அரியாங்குப்பம் - சுண்ணாம்பாறு வடக்கு கரையிலிருந்து RK நகர் மேல் தொட்டி வரை நீர் அழுத்த குழாய் ₹ 2.12 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும். புதுச்சேரி அரியாங்குப்பம்-காக்காயன் தோப்பு கிராமத்தில் ₹ 1.67 கோடி செலவில் பழுதடைந்த குடிநீர் குழாய் மற்றும் சாலைகள் சீரமைக்கப்படும். பொது சுகாதாரக் கோட்டத்திற்கு "சபாய் மித்ரா கரம்சாரி சுரக்ஷா" திட்டத்தின் கீழ் ₹ 2.52 கோடி மதிப்பீட்டில் பராமரிப்பு உபகரணங்கள் வாங்கப்படும். மேலும், புதுச்சேரி, விமான நிலையத்தை விரிவுபடுத்துவதன் காரணமாக அதன் சுற்றுச்சுவரை மாற்றியமைத்தல், சாலை அமைத்தல் மற்றும்

கருவடிக்குப்பத்தில் உள்ள கழிவு நீர் நிலையத்தின் சுற்றுச்சுவரை மேம்படுத்துதல் போன்ற பணிகள் ₹ 8.54 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

124. “ஜல்ஜீவன்” திட்டத்தின்கீழ் ₹ 28.27 கோடி மதிப்பீட்டில் புதுச்சேரி – கோனேரிக்குப்பம் உளவாய்க்கால் மற்றும் அகரம் கிராமம், திருக்காஞ்சி கிராமம், திருபுவனைப்பாளையம், மதகடிப்பட்டுபாளையம், மண்ணாடிப்பட்டு, சோம்பேட், முட்ராம்பட்டு மற்றும் காரைக்கால் பகுதிகளில் நெடுங்காடு கிராமம், அக்கம்பட்டு கிராமம், T.R. பட்டினம் மற்றும் முதலிமேடு கிராமத்திற்கு குடிநீர் வழங்கல் திட்டம் நிறைவேற்றப்படும்.

125. நபார்டு வங்கியின் கடனுதவியுடன் புதுச்சேரி மண்ணாடிப்பட்டு, விநாயகம்பேட், நெட்டப்பாக்கம், கரியமாணிக்கம், கல்மண்டபம், வில்லியனூர் – கீழுர், சூரமங்கலம், கன்னியக்கோயில், காரைக்கால் பகுதியில் கோவில்பத்து மற்றும் T.R. பட்டினத்தில் சுமார் ₹ 58.75 கோடி மதிப்பீட்டில் குடிநீர் வழங்கல் திட்டம் நிறைவேற்றப்படும். மேலும், புதுச்சேரி செல்லிப்பட்டு கிராமத்தில் பிள்ளையார் குப்பம் அணைக்கட்டு அருகே சங்கராபரணி ஆற்றின் குறுக்கே ₹ 20.40 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை கட்டப்படும்.

புதுச்சேரி பாகூர் ஏரியை சுற்றியுள்ள கரையை மேம்படுத்தி உபரி நீர் அணையின் குறுக்கே ₹ 8.18 கோடி மதிப்பீட்டில் ஒரு வழிப்பாலம் கட்டப்படும்.

126. AMRUT திட்டத்தின்கீழ் ₹ 175.07 கோடி மதிப்பீட்டில், புதுச்சேரி, முதலியார்பேட்டை, சுதானா நகர், உழவர்கரை டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர், காட்டாமணிக்குப்பம் மற்றும் ரெயின்போ நகர், காரைக்கால், நேரு நகர் மற்றும் தலத்தெருவில் குடிநீர் வழங்கல் திட்டத்தின் மூலம் சீரமைக்கப்படும். புதுச்சேரி இலாசுப்பேட்டை, துப்புராயப்பேட்டை, வில்லியனூர் சங்கராபரணி ஆற்றுப் பகுதி மற்றும் காரைக்கால் அரசலாற்றில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் நிறுவப்படும்.

127. சுகாதாரம், பள்ளிக்கல்வி, உயர்கல்வி, துறைமுகம், சிறைத்துறை, தேசிய சட்டப் பல்கலைக்கழகம், சட்டத் துறை, இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் குடியிருப்பு மற்றும் ஆளுநர் மாளிகை உள்ளிட்ட இடங்களை புதுப்பித்தல், மேம்படுத்துதல், சீரமைத்தல் மற்றும் புதியதாக கட்டிடங்கள் கட்டும் பணிகள் ₹ 643.78 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளன. மேலும், வம்பாகீரப்பாளையம் முதல் சின்ன வீராம்பட்டினம் வரை புதிய தொழில்நுட்ப முறையில் மேம்பாலம் கட்ட சாத்தியக்கூறுகள் ஆராயப்படும்.

128. மேலும், ₹ 381.23 கோடி திட்ட மதிப்பீட்டில் (₹ 66.65 கோடி நபார்டு வங்கியின் நிதியுதவி உட்பட) பல்வேறு பகுதிகளில் 92 சாலைகள், கழிவுநீர் வாய்க்கால் கட்டுமான பணிகள் மற்றும் மாகி ஆற்றோர நடைபாதையை மேம்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. மேலும், உப்பனார் கால்வாயின் மேல் பாலம் அமைக்கும் பணிகள் விரைவில் நிறைவடைய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திட்டம் மற்றும் ஆராய்ச்சி

129. புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் தற்போது மூலதன பணிகளுக்கானத் திட்டங்களுக்கு விரிவான திட்ட அறிக்கை ஒவ்வொரு துறையும் தனித்தனியாக தயாரித்து வருகின்றன. இதனால் ஏற்படும் காலதாமதம் மற்றும் நிர்வாக சிக்கல்களை களையும் பொருட்டு, அனைத்து துறைகளின் பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கையை தயாரிக்கும் பணியை திட்டம் மற்றும் ஆராய்ச்சித் துறையில் ஒரு தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட உள்ளது. இப்பிரிவானது, அனைத்து துறைகளிடமிருந்து பெறப்படும் திட்டங்களின் அறிக்கையை ஆராய்ந்து விரிவான

திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியை மேற்கொண்டு விரைவாக நிதி நிறுவனங்களிடமிருந்தும் மத்திய அரசிடம் இருந்தும் கடன்பெற ஏதுவாக இருக்கும்.

அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல்

130. புதுச்சேரி அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறையானது மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி பருவ நிலை மாற்ற ஆராய்ச்சி பணிகள், பல்வேறு திறன் மேம்பாடு மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், பருவநிலை மாற்றம் குறித்த இணைய தளத்தை உருவாக்குதல் போன்ற பணிகளை மேற்கொண்டுள்ளது.

131. பசுமையான கடற்கரை சுற்றுலா தலங்களை உருவாக்குவதற்கானத் திட்டம் மேற்கொள்ளப்படும். மேலும், சுற்றுச்சூழலை பாதிக்காதவாறு கடற்கரைகளை மேம்படுத்தும் திட்டங்கள் செயல்படுத்தப்படும். மத்திய அரசின் புவி அறிவியல் அமைச்சகம் மூலம் புதுச்சேரியின் கடற்கரையை மேம்படுத்தும் பொருட்டு கடற்கரை மேலாண்மைத் திட்டத்தை செயல்படுத்துகிறது. மேலும், புதுச்சேரி கடற்கரையை பராமரித்தல் மற்றும் கரையோர அரிப்புத் தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். புதுச்சேரி, சேதராப்பட்டு மற்றும் திருக்கனூர் பகுதியில் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்று அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

132. ஒரு முறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களின் தடையை செயல்படுத்த மாற்று பொருட்களை ஊக்குவிக்கும் வண்ணம் துணி பைகளை வழங்கும் இயந்திரங்கள் மற்றும் பிளாஸ்டிக் பாட்டில்களை நொருக்கி மறு சுழற்சிக்கு வகை செய்யும் இயந்திரங்களை பொது இடங்களில் நிறுவப்படும். குப்பைக் கிடங்குகளில் சேரும் பிளாஸ்டிக் கழிவுகளின் அளவைக் குறைக்கவும், பிளாஸ்டிக் பாட்டில்களை முறையாக மறுசுழற்சி செய்வதை ஊக்குவிக்கவும் உதவும். மேலும், நொறுக்கப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகளை பிளாஸ்டிக் சாலைகள் அமைப்பதற்குப் பயன்படுத்தப்படும். வாகன புகையை கட்டுப்படுத்த அதிநவீன உபகரணங்களுடன் கூடிய நடமாடும் கண்காணிப்பு வாகனம் வாங்கப்படும்.

நகர மற்றும் கிராம திட்டமிடல்

133. எனது அரசு நகர மற்றும் கிராமப்புற பகுதிகளை அனைத்து விதத்திலும் முன்னேற்றம் அடையச் செய்யும் வகையில் பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இதன் தொடர்ச்சியாக (i) புதுநகர் – ரெட்டியார்பாளையம் பிரதான சாலையை ₹ 18.50 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும். (ii) பெரிய வீராம்பட்டினத்தில், கடற்கரை சாலை மற்றும் நாகூரான் தோட்டம் சாலையை இணைக்கும் சிமெண்ட் சாலை

₹ 18 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும். (iii) காஞ்சிபுரம் – கோவில்பத்து காரைக்கால் பகுதியில் ₹ 39.30 இலட்சம் மதிப்பீட்டில் உட்புற சாலைகள் அமைக்கப்படும். (iv) புதுச்சேரி முதலியார்பேட்டையில் உள்ள அனிதா நகரின் சாலைகள் மற்றும் வடிகால்கள் ₹ 59.40 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படும். (v) புதுச்சேரி கண் டாக்டர் தோட்டத்தில் ₹ 45 இலட்சம் செலவில் உட்புறச் சாலையை மேம்படுத்துதல் மற்றும் பூங்கா அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். (vi) ₹ 20.30 இலட்சம் செலவில் காரைக்கால் கோவில்பத்து பகுதியில் உள்ள குடியிருப்புகள் சீரமைக்கப்படும். (vii) ₹ 26.95 இலட்சம் மதிப்பீட்டில் மாகி கடற்கரைச் சாலையில் உள்ள வடிகால்களை மேம்படுத்தும் பணி, அச்சுதானந்தன் நினைவு நூலகத்தின் பின்புறம் உள்ள பாதைக்கு சிமெண்ட் கான்கீரிட் நடைபாதை அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

134. மத்திய அரசின் பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்தின் கீழ், கூடுதலாக 2,500 வீடு கட்டும் பணிகள் நிறைவு செய்யப்படும். இத்திட்டத்தில் இணைந்து இதுவரை வீடுகளை கட்ட தொடங்காத மற்றும் கட்டுமானப் பணி நிறைவு பெறாமல் உள்ள பயனாளிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு பணிகளை விரைவில் நிறைவு செய்ய ஆவணச் செய்யப்படும். புதுச்சேரி, காரைக்கால், மாகி மற்றும் ஏனாம் பகுதிகளில்

பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு குடியிருப்பு திட்டத்தின்கீழ், 1,200 பயனாளிகளுக்கு இரண்டாவது மற்றும் மூன்றாவது தவணை நிதியுதவி வழங்கப்படும்.

135. இவ்வாட்சிபரப்பில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்ட பெருந்தலைவர் காமராஜர் வீடு கட்டும் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படும். பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்தில் பயன்அடையாத குடிசையில் வசிக்கும் புதிய பயனாளிகளுக்கு ₹ 3.50 இலட்சம் புதுச்சேரி குடிசை மாற்று வாரியம் மூலமாக வழங்கப்படும். மேலும், குடிசையில் வாழும் அட்டவணையின மற்றும் பழங்குடியின மக்களுக்கு ₹ 5.00 இலட்சம் வீடு கட்டும் உதவித்தொகையாக வழங்கப்படும்.

136. தொழில்துறை கட்டிடங்கள், பல அடுக்குமாடி கட்டிடங்கள் போன்றவற்றிற்கு இணைய வழி மூலம் அனுமதி வழங்கும் பொருட்டு, புதுச்சேரி கட்டிட துணைச் சட்டங்கள் மற்றும் மண்டல ஒழுங்குமுறை முழுமையாக திருத்தம் செய்யப்படும்.

சுற்றுலா

137. புதுச்சேரி மாநிலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவரும் இடமாக இருப்பதால், அவை நேரடியாகவும், மற்றும் மறைமுகமாகவும் நமது மாநிலத்தின்

பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் ஏதுவாக உள்ளது. இதனை மேலும் மேம்படுத்தும் பொருட்டு, பல சுற்றுலா வளர்ச்சித் திட்டங்களை மேற்கொண்டுள்ளது. இந்திய அரசின் சுற்றுலா அமைச்சகத்தின் "ஸ்வதேஷ் தர்ஷன் 2.0 மற்றும் பிரசாத்" திட்டத்திற்கு புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

138. புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் உள்ள பாரம்பரிய மற்றும் ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்த கோயில்கள் சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்களை கவரும் வகையில் மேம்படுத்தப்படும். (i) புதுச்சேரி பகுதியில், கதிர்காமம் ஸ்ரீகதிர்வேல் சுவாமி கோயில், வில்லியனூர் ஸ்ரீதென்கலை வரதராஜப்பெருமாள் கோயில், வில்லியனூர் மாதா கோயில், வீராம்பட்டினம் ஸ்ரீசெங்கழுநீர் அம்மன் கோயில், காலாப்பட்டு ஸ்ரீமுருகன் கோயில், பத்துக்கண்ணு பிள்ளையார் குப்பம் ஸ்ரீகூத்தாண்டவர் கோயில், தொண்டமாநத்தம் ஸ்ரீபிடாரி மீனாட்சி அம்மன் கோயில், முத்தியால்பேட்டை தென்கலை ஸ்ரீசீனிவாசபெருமாள் கோயில், கருவடிக்குப்பம் ஸ்ரீகுரு சித்தானந்த சுவாமி கோயில், முத்திரையர்பாளையத்தில் புனரமைக்கப்பட்ட ஆயிகுளம், பாகூரில் உள்ள ஸ்ரீமூலநாதசுவாமி கோயில், நெல்லித்தோப்பில் உள்ள ஏத்கா மசூதி, ஒதியம்பேட்டில்

உள்ள ஸ்ரீகாசி விசுவநாதர் கோயில், ஏம்பலம் கிராமத்தில் உள்ள ஸ்ரீஅம்பளத்தாடி அப்பர் கோயில், வாதானூர் சிவன் கோயில், சோம்பேட் பவழக்குடி சித்தர் கோயில், மணலிப்பட்டு ஈஸ்வரன் கோயில் (ii) காரைக்கால் பகுதியில் சேத்தூர் ஸ்ரீஏகாம்பரேஸ்வரர் கோயில், நிரவி ஸ்ரீஜம்புநாத சுவாமி கோயில், காரைக்கால் அம்மையார் கோயில், கோவில்பத்து ஸ்ரீபர்வதீஸ்வரர் கோயில், திருவேட்டக்குடி ஸ்ரீதிருமேனி அழகர் சுவாமி கோயில், வரிச்சிக்குடி ஸ்ரீவரதராஜப் பெருமாள் கோயில், திருமலைராயன் பட்டினம் ஸ்ரீவெங்கடேசப் பெருமாள் கோயில், திருநள்ளார் ஸ்ரீதர்பாரண்யேஸ்வரர் கோயில், பெரிய மசூதி ஆகியவைகளை மேம்படுத்தும் பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கையை தயாரிப்பதற்காக சுற்றுலா அமைச்சகத்தின் வழிகாட்டுதலின்படி ஓர் ஆலோசகர் நியமிக்கப்படுவார். விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு நிதியுதவிக்காக மத்திய அரசிடம் சமர்ப்பிக்கப்படும்.

139. புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒலி, ஒளி மற்றும் மல்டி-மீடியா நிகழ்ச்சிகள் நடத்தப்படும். சுற்றுச்சூழல் சுற்றுலா நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காக பாகூர் ஏரி, முள்ளோடை குளம், கனகன் ஏரி, ஊசுடு ஏரி மற்றும் சுண்ணாம்பாறு தடுப்பணை, அரியாங்குப்பம் ஏரி ஆகியவை

மேம்படுத்தப்பட உள்ளது. மணப்பட்டு கிராமத்தில் கடற்கரை முகப்பில் உள்ள 100 ஏக்கர் நிலத்தில் சுற்றுலாத் திட்டங்களை நிறுவுவதற்காக புதுச்சேரி அரசு தொடர் முயற்சிகள் எடுத்து வருகிறது. தீம் பூங்காக்கள்; ஓய்வு விடுதிகள்; மாநாட்டு மையங்கள் மற்றும் சாகச விளையாட்டுகள் போன்றவை உருவாக்கப்படும். புதிய திட்டங்களுக்கான விரிவான திட்ட அறிக்கை மற்றும் மதிப்பீடு தயாரிப்பதற்கான ஆலோசகர்களை நியமிக்கும் பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

140. இவ்வாட்சிப்பரப்பில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் சுமார் 5,000 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கும் பொருட்டு சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக பத்து ஆண்டு கால முன்னோக்கு சுற்றுலாத் திட்டம் உருவாக்கப்படும். இந்த முன்னோக்கு திட்டமானது உள்கட்டமைப்பு மேம்பாடு, தங்குமிடம், திறன் மேம்பாடு, தீம் பூங்காக்கள், சாகச விளையாட்டுகள், நீர் விளையாட்டுகள், கடற்கரை விளையாட்டுகள், கோயில் சுற்றுலா, சுற்றுலா இலக்குகளை மையப்படுத்துதல் போன்ற அம்சங்கள் உள்ளடங்கியதாக இருக்கும். மேலும், மாணவர்களுக்கு சுற்றுலாவைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் குறிப்பாக கிராமப்புற மாணவர்களின் நலனுக்காக மாணவ சுற்றுலா சங்கம் (Student Tourism Club) அனைத்து பள்ளிகளிலும் அமைக்க ஆவன செய்யப்படும்

போக்குவரத்து

141. மத்திய அரசு அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 15 ஆண்டுகளுக்கு மேல் பயன்படுத்தப்பட்ட மோட்டார் வாகனங்களை பயன்பாட்டிலிருந்து நீக்குமாறு அறிவுறுத்தியுள்ளது. இவை மாசு மற்றும் எரிபொருளின் நுகர்வுதிறனை குறைக்கும் வகையில் இருப்பதோடு மட்டுமின்றி, பழுதடைந்த வாகனங்களின் உலோகம் மற்றும் உதிரிபாகங்களை மறுசுழற்சி செய்வதன் மூலம் வாகன உற்பத்தியாளர்களின் உற்பத்தி செலவை கட்டுபடுத்தப்படும். இந்த நோக்கத்தை செயல்படுத்துவதற்காக மத்திய நெடுஞ்சாலை மற்றும் சாலைப் போக்குவரத்து அமைச்சகம் (MoRTH) மோட்டார் வாகனங்கள் விதிகள் 2022 (Registration and Functions of Vehicles Scrapping Facility Amendments) அறிவித்துள்ளது. இது தொடர்பாக, மத்திய அரசு அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை பழைய வாகனத்திற்கு மாற்றாக புதிய வாகனம் வாங்கும் போது செலுத்த வேண்டிய மோட்டார் வாகன வரி மீதான சலுகை, உரிமம் மற்றும் பழைய வாகனத்தை உரிமையாளர்கள் பயன்பாட்டிலிருந்து நீக்க ஊக்குவித்தல் ஆகிய நடவடிக்கைகளை செயல்படுத்த அறிவித்துள்ளது.

142. புதுச்சேரி சாலைப் போக்குவரத்துக் கழகத்தில் உள்ள பழைய பேருந்துகளை மாற்றி நகர்புற மற்றும் வெளியூர் போக்குவரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

50 மின்சார மற்றும் 50 டீசல் பேருந்துகளை வாங்குவதற்கு ஒப்பந்த புள்ளி கோரப்பட்டுள்ளது. விரைவில் புதிய பேருந்துகள் இயக்கப்படும். மேலும், 10 பேருந்துகளுக்கு புதியதாக மேற்கூடு (Bus Body) கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

143. புதுச்சேரி சாலைப் போக்குவரத்துக் கழகத்தில் இணையதள வசதியுடன் கூடிய தானியங்கி கட்டண வசூல் கருவி பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும். மேலும், இதன் ஒரு அங்கமாக தேசிய பொது பயண அட்டை (National Common Mobility Card) பொது மக்களுக்கு அறிமுகப்படுத்தப்படும். காற்று மாசுபடுவதைக் கருத்தில் கொண்டு மின்சாரத்தால் இயங்கும் வாகனங்களை அதிக அளவில் மக்கள் பயன்பாட்டில் கொண்டுவர மின்சார வாகன போக்குவரத்துக் கொள்கை (Electric Mobility Policy) கொண்டுவரப்படும். பொதுமக்களின் நிதிச் சுமையை குறைக்க அடுத்த நான்கு நிதியாண்டுகளுக்கு (2023-24 முதல் 2026-27 வரை) மின்சார வாகனம் வாங்குவதற்கு ஒவ்வொரு ஆண்டிற்கும் சுமார் ₹ 10 கோடி அளவில் மானியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

144. புதுச்சேரியில் நாள்தோறும் நிகழும் சாலை விபத்து மற்றும் அதனால் ஏற்படும் உயிர் இழப்புகளை பெருமளவு குறைப்பதற்காக உச்ச நீதிமன்றத்தின் சாலை பாதுகாப்புக்

குழுவின் வழிகாட்டுதலின்படி போக்குவரத்துத் துறை, போக்குவரத்துக் காவல் துறை மற்றும் பொதுப்பணித் துறைகளுடன் இணைந்து சாலைப் பாதுகாப்பு உள்கட்டமைப்பை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், போக்குவரத்து சம்பந்தமாக வழிமுறைகளை மக்களுக்கு அறிவுறுத்தி செயல்படுத்தப்படும்.

ஆதிதிராவிடர் நலம் மற்றும் பழங்குடியினர் நலம்

145. எனது அரசு அட்டவணையின மற்றும் பழங்குடி இன மக்களின் சமூக-பொருளாதார முன்னேற்றத்தில் முழு கவனம் செலுத்துகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். இந்த ஆண்டு சிறப்புக் கூறு திட்ட நிதியாக (SCSP) ₹ 441 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

146. இதன் ஒரு பகுதியாக, புதுச்சேரி சாலைப் போக்குவரத்து கழகத்தால் இயக்கப்படும் உள்ளூர் பேருந்துகளில் அட்டவணையின பெண்கள் இலவசமாக பயணம் செய்ய வழிவகை செய்யப்படும். அனைத்து நலத்திட்டங்களில் பயன்பெற தற்போதுள்ள வருவாய் உச்சவரம்பை ₹ 8 இலட்சமாக உயர்த்தப்படுகின்றது. பாபாசாஹேப் அம்பேத்கர் அவர்களின் பஞ்சரத்னா தலங்களில் இந்தியாவில் உள்ள நான்கு தலங்களுக்கு ஆண்டுதோறும் அட்டவணையின மக்கள் யாத்திரை

மேற்கொள்ள நிதியுதவி வழங்கப்படும். மேலும், இருதய அறுவை சிகிச்சை மற்றும் பிற நோய்களுக்கான உயர் மருத்துவ சிகிச்சைக்காக ₹ 3 இலட்சம் நிதியுதவி வழங்கப்படும்.

147. மின்சக்தி மூலம் ஆட்டோ ஓட்டுவதற்கு உரிமம் பெற்ற பெண் ஆட்டோ ஒட்டுநர்களுக்கு மின் ஆட்டோ வாங்குவதற்கு மானியம் வழங்கப்படும். தற்போது இலவச வேட்டி சேலைக்காக வழங்கப்படும் ₹ 500 உயர்த்தி ₹ 1,000 ஆக வழங்கப்படும். கலப்புத் திருமணம் செய்து கொள்ளும் தம்பதியர்களுக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகை ₹ 2,50,000 உயர்த்தி ₹ 3,00,000 ஆக வழங்கப்படும். நிலமற்ற ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினத்தவர்களுக்கு தேவையான நிலம் கையகப்படுத்தி தகுதியானவர்களுக்கு இலவச மனைப்பட்டா வழங்கப்படும்.

148. "பிரதான் மந்திரி ஜன் விகாஸ் கார்யக்ரம்" திட்டத்தின்கீழ் காரைக்கால் அவ்வையார் மகளிர் கல்லூரி மற்றும் டாக்டர் கலைஞர் முதுகலை ஆராய்ச்சி நிறுவனத்திற்கு நவீன ஆய்வுக்கூட வசதிகளுடன் கூடிய புதிய கட்டிடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

149. மேலும், அட்டவணையின மற்றும் பழங்குடியின மக்களின் உரிமையை பாதுகாக்கும் பொருட்டு, உயர்மட்ட குழுக்கள், வளர்ச்சி குழுக்கள் அமைக்கப்படும். வன்கொடுமை தடுப்புச் சட்டம் முறையாக நடைமுறைப்படுத்த உரிய ஆவணக்குழு அமைக்கப்படும்.

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம்

150. எனது அரசு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினரின் முன்னேற்றத்திற்கு தனி கவனம் செலுத்தி வருகிறது. இதுவரை நடைமுறையில் இருக்கும் அனைத்துத் திட்டங்களும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். மேலும், இவ்வாண்டு 100 ஏழை சலவைத் தொழிலாளர்களுக்கு தலா ₹ 15,000 மதிப்புள்ள தள்ளு வண்டி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், ஏழை கைவினைஞர்களுக்கு இலவச கருவிகள் வழங்கும் திட்டத்தின்கீழ், முடித்திருத்தும் தொழிலாளர்களுக்குத் தேவையான உபகரணங்கள் வழங்கப்படும். கரசூரில் உள்விளையாட்டு அரங்கம் கட்டப்படும்.

சமூக நலம்

151. எனது அரசு மாற்றுத்திறனாளிகளின் சமூக-பொருளாதார முன்னேற்றத்திற்கு தனி கவனம் செலுத்துகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். இதன் தொடர்ச்சியாக, இவ்வாண்டு உயர் கல்வி பயிலும் பார்வைத் திறன் குறைபாடு உடைய 50 மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு ₹ 25 இலட்சம் மதிப்பீட்டில் இலவசமாக மடிக்கணினிகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

152. மேலும், மூத்த குடிமக்களுக்கு 50 பல்நோக்கு மருத்துவ முகாம்கள், அரசு, தனியார் மருத்துவமனை மற்றும் மூத்த குடிமக்கள் நலச்சங்கம் (PONCARE) இணைந்து ₹ 12.50 இலட்சம் செலவில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடு

153. மகளிர் மற்றும் குழந்தைகளின் நலனுக்காக பல்வேறு நலத்திட்டங்களை எனது அரசு செயல்படுத்தி வருகிறது. எனது அரசின் முக்கிய நோக்கம் மகளிர் மற்றும் குழந்தைகள் நலனைப் பேணிக்காப்பதுடன் அவர்களது சமூக-பொருளாதார மற்றும் பாதுகாப்பிற்கு உகந்த அனைத்து நலத்திட்டங்களையும் செயல்படுத்தும்.

154. இதன் தொடர்ச்சியாக, குழந்தைகள் பாதுகாப்பு இல்லத்திலிருந்து வெளியேறும் குழந்தைகளை, கண்டறிந்து அவர்களின் கல்வி, வாழ்வாதாரம் மற்றும் வேலைவாய்ப்பை உருவாக்க “பின் பராமரிப்புத் திட்டத்தின்”-கீழ் (After Care Programme) அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

155. புதுச்சேரி, மாகி மற்றும் ஏனாம் பகுதிகளில் ஊனமுற்ற குழந்தைகளுக்கான விடுதி மற்றும் தற்காலிக உறைவிட இல்லம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். மாகி

மற்றும் ஏனாம் பகுதிகளில் குழந்தைகள் நலக் குழுமம் மற்றும் இளஞ்சிறார் நீதிக் குழுமம் மீண்டும் அமைக்க ஏற்பாடு செய்யப்படும். புதுச்சேரியில் சிறார்களுக்கான காப்பகம் மற்றும் மாகி பகுதியில் குழந்தை பராமரிப்பு மையங்கள் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

156. குழந்தைகளின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் கிராமப்புற அளவில் நடத்தப்பட உள்ளது. மேலும், குழந்தைகள் பாதுகாப்பு இல்லங்களில் திறன் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும்.

157. அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு பாலியல் அத்துமீறல்கள் மற்றும் போதைப் பொருள் பயன்பாடு ஆகியவற்றிலிருந்து அவர்களை பாதுகாப்பது குறித்து பள்ளி அளவில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளன.

பொது

158. அனைத்து குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைதாரர்களும் பயன்பெறும் வகையில் சமையல் எரிவாயு சிலிண்டருக்கு மாதம் ஒன்றுக்கு ₹ 300 வீதம் வருடத்திற்கு மொத்தம் 12 சிலிண்டருக்கு மானியம் வழங்கப்படும். இதன் மூலம் அரசிற்கு ஆண்டு ஒன்றுக்கு கூடுதலாக ₹ 126 கோடி செலவு ஆகும்.

159. எனது அரசு, பெண் குழந்தைகளின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு இம்மாநிலத்தைச் சார்ந்தவர்களுக்கு பிறக்கும் பெண் குழந்தைகளுக்கு, "முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின்"-கீழ், குழந்தை பிறந்தவுடன் ₹ 50,000 தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் 18 வருட காலத்திற்கு நிரந்தர வைப்புத் நிதியாக செலுத்தப்படும்.

160. எனது அரசு, படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கும் விதமாக, ₹ 100 கோடிக்கு மேல் முதலீட்டில் தொழில் தொடங்கும் நிறுவனங்களை ஊக்குவிக்கும் பொருட்டு, நிலம், கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்களின் மதிப்பீட்டிற்கும் தொழில் தொடங்கப்பட்ட தேதியிலிருந்து முதல் ஐந்து வருட காலத்திற்கு வருடம் ஒன்றிற்கு 1 விழுக்காடு மானியம் வீதம் மொத்தம் 5 விழுக்காடு மானியம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

161. "மத்திய அரசின் பிரதம மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா" (Pradhan Mantri Suraksha Bima Yojana) என்ற விபத்துக் காப்பீட்டுத் திட்டம் ஏழை மற்றும் எளிய மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு அமுல்படுத்தவுள்ளது. இந்த சமூகபாதுகாப்புத் திட்டத்தில் அனைத்து சிகப்பு குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைதாரர்களுக்கும் நபர் ஒருவருக்கு ஆண்டிற்கு செலுத்த வேண்டிய பிரிமியம் தொகையை அரசே செலுத்தும்.

162. எனது அரசு வணிகர்களின் நலன்கருதி "வணிகர் நல வாரியத்திற்கு" இந்த நிதி ஆண்டில் ₹ 2 கோடி ஒதிக்கீடு செய்யப்படும்.

163. புதுவை மாநிலம் ஒரு சிறிய ஆட்சிப்பரப்பைக் கொண்டவையாகும். நமக்கு குறைந்த அளவே வருமானத்தை ஈட்டுதலுக்குரிய சாத்தியக் கூறுகள் இருந்த போதிலும், நாம் பல நலத் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்திடவும் மற்றும் இம்மாநிலத்தை வளர்ச்சிப் பாதையில் எடுத்து செல்ல வேண்டிய பொறுப்பிலும் உள்ளோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவர். மேலும், அரசு கொண்டு வரும் நலத்திட்டங்கள் அனைத்து மக்களுக்கும் குறிப்பாக ஏழை எளிய மக்களுக்கு காலத்தோடு சென்றடைவது இன்றியமையாததாகும். இதற்கு அரசு ஊழியர்களின் பணி மகத்தானதாகும். இதனைக் கருத்தில் கொண்டு அரசுத் துறைகளில் நேரடி நியமனம் மூலம் நிரப்ப வேண்டிய அனைத்து காலிப் பணியிடங்களை உடனடியாக நேரடி நியமனம் மூலம் நிரப்பவும் மற்றும் தகுதி வாய்ந்த அரசு ஊழியர்களுக்கு பணி மூப்பு அடிப்படையில் பதவி உயர்வு வழங்கிடவும் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கப்படும் என்பதை இப்பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

164. இத்துடன், இவ்வாட்சிப்பரப்பின் 2023-24 நிதியாண்டின் ₹ 11,600 கோடிக்கான மக்கள் நலன் சார்ந்த வரவு-செலவுத் திட்ட அறிக்கையை இம்மேலான பேரவையின் பார்வைக்காகவும் மற்றும் ஒப்புதலுக்காகவும் சமர்ப்பிக்கிறேன்.

வாழ்க பாரதம் !

வெல்க புதுச்சேரி !

நன்றி ! வணக்கம் !

ஆயி மண்டபம், புதுச்சேரி

வடிவமைத்து அச்சிட்டோர் : அரசினர் மத்திய அச்சகம், புதுச்சேரி – 605 009.